மீன், இறைச்சி,
மரக்கறி சாப்பாடுகளை
மதிய உணவுக்கு
சுத்தமாக புசிப்பதற்கு
திப்பொன்
சீன உணவகம்
326, பிரதான வீதி,
சாள்ஸ் வித். அருகில்,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

உதயன்

Registered as a Newspaper

விலை
ரூபா
5-00

புரியாணி, நூடில்ஸ்,
பிறைட் றைஸ்,
சூப் வகைகளுக்கு
சிறந்த இடம்
திப்பொன்
சீன உணவகம்
326, பிரதான வீதி,
(புனித சாள்ஸ் வித். அருகில்
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 15 புதன்கிழமை (31 - 08 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 277

பொதுத்தேர்தலுக்கு முன்னர் திட்டப்பட்ட

வடக்கு மீதான தாக்குதல் திட்டத்தை புதிய அரசு மேலும் தள்ளிப்போட்டது

ராணுவ நடவடிக்கை அழிவுக்கே வழிவகுக்கும் என்கிறார் பிரதமர்

கொழும்பு. ஓகஸ்ட் 31

ஐ. தே. க அரசு ஆட்சியில் இருந்த காலத்தில் – பொதுத் தேர்தலுக்கு முன்னர் – தீட்டப்பட்ட வடபகுதி மீதான தாக்குதல் திட்டத்தை புதிய அரசு தள்ளிப்போட்டுள்ளதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

சமாதான நடவடிக்கைகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது எடுக்கப்படும் எந்தவோர் இராணுவ நடவடிக்கையும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சாத்தியக்கூற்றை சீர்குலைப்பதுடன், வடக்கில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களையும் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரையும் கொன்றொழிப்பதற்கே வழிவகுக்கும் என்று புதிய பிரதமர் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிலிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைத்துள்ளது குறித்து கேட்கப்பட்டபோதே புதிய பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"நான் ஒரு இராணுவ நிபுணர் இல்லை. எனினும் பிரச்சினைக்குரிய வித்திலே — உள்ளூர் அரசியல் லாபத்தை தேடுவதற்காக — இவ்வேளையில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வது சர்வதேச ரீதியில் இலங்கையின் கௌரவத்துக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்பது எனக்குத் தெரியும்" — என்றார் சந்திரிகா.

"பேச்சுவார்த்தைக்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு உதவி வழங்கும் நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் வற்புறுத்தி வருகின்றன.

"எனவே ஆயுதக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இரண்டாவது அமைச்சரவை கூட்டம் இன்று

கொழும்பு ஓ. 31

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமைச்சரவையின் இரண்டாவது கூட்டம் இன்று புதன்கிழமை நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை தெரிவிப்பதற்காக பத்திரிகையாளர் மாநாடு ஒன்று பின்னர் நடத்தப்படும் என்று அரசு சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஓ-எ-6)

மிருசுவிலில் நேற்று சம்பவம்:

ஷெல்லை மரத்தில் குத்திய சிறுவர்கள் மூவர் காயம்!

ஒருவனின் கை துண்டிப்பு!!

தென்மராட்சி, ஓ. 31

பனம்பழம் பொறுக்கச் சென்ற மூன்று சிறுவர்கள், பனந் தோப்பில் – மண்ணில் புதையுண்டிருந்த – வெடிக்காத பழைய ஷெல் ஒன்றை கண்டெடுத்து – அதை மரத்தில் குத்தியபோது அது வெடித்துச் சிதறியதில் காயமடைந்தனர்.

ஷெல்லைக் குத்திய சிறுவனின் இடதுகை முழங்கைக்கு கீழ் துண்டிக்கப்பட்டது. இடது கண்ணும் பாதிப்படைந்துள்ளது. அந்தச் சிறுவனின் உடல் முழுவதும் எரிகாயங்கள் காணப்படுகின்றன.

இச்சம்பவம் நேற்று நண்பகல் மிருசுவில் வடக்கில் இடம்பெற்றது.

மிருசுவிலைச் சேர்ந்த கந்தசாமி ரவிக்குமார் (12 வயது) மற்றும் பொன்னுத்துரை மயூரன் (7 வயது), ஞானச்சந்திரன் உதயகுமார் (5 வயது) ஆகியோரே காயமடைந்த சிறுவர்கள் ஆவர்.

இவர்கள் மூவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ-117-15-13)

வவுனியாவில் 7 இராணுவத்தினர் காயம்!

கொழும்பு. ஓ. 31

வவுனியா, பூவரசங்குளம் இராணுவப் பாதுகாப்புப் பகுதி மீது விடுதலைப் புலிகள் கடந்த ஞாயிறு காலையிலும் மாலையிலும் நடத்திய இரு தாக்குதல்களில் ஏழு இராணுவத்தினர் காயமடைந்தனர். கொழும்பின் பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தகவலை தெரிவித்தன. (உ-எ-6)

சந்திரசேகரன் எம்.பியானது விபத்து என்கிறார் தொண்டா

கொழும்பு, ஓ. 31

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் எம்.பியானது "ஒரு விபத்தே"

இ. தொ. கா தலைவர் எஸ். தொண்டமான் முன்கண்டவாறு சண்டே லீடருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

வடக்கு–கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்காக அஷ்ரப்-தொண்டமான் உடன்பாட்டை அமுல் நடத்தும்படி, வாய்ப்பு வரும்போது நான் கேட்கக்கூடும். சரியான சந்தர்ப்பம் வரும்போது நான் இதனை நிச்சயமாக செய்வேன்.

"இந்த விஷயம் குறித்து அஷ்ரப் அமைச்சரான பின்னர் அவருடன் நான் பேசவில்லை" — என்றும் அவர் கூறினார்.

மலையக மக்கள் முன்னணி எம். பி. சந்திரசேகரன் பிரதி அமைச்சரானதன் மூலம் அவர் மலைநாட்டில் காலூன்றும் அபாயம் ஏற்பட்டுள்ளதால்தான் நீங்கள் முன்னணி மீது ஆத்திரப்படுகிறீர்கள் என்று கூறப்படுகின்றதே என்ற கேள்விக்கு தொண்டமான் பதிலளிக்கையில்— "வேறு யாருக்கும் சந்திரசேகரன் அச்சுறுத்தலாக இருக்க முடியும். நிச்சயமாக எனக்கோ, இ. தொ. காவுக்கோ அல்ல. 33 ஆயிரம் வாக்குகள் மட்டும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

புதிய அரசுக்கு முழு ஆதரவுதர இ. தொ. காங்கிரஸ் முடிவு!

சந்திரிகாவுக்கு தொண்டா புகழாரம்

கொழும்பு, ஓ. 31

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு தமிழ்மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு முன்வந்திருக்கிறது. எனவே இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தாம் ஆதரவு கொடுக்கப் போவதாக இ. தொ. கா. தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. எஸ். தொண்டமான் இலங்கை வானொலிக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார். அப்பேட்டியில் அவர் கூறியுள்ளதாவது:-

(6 ஆம் பக்கம் பார்க்க)

அரசின் தூதராக அஷ்ரப் யாழ்ப்பாணம் வர அவா!

கொழும்பு. ஓ. 31

தனிப்பட்ட ரீதியில் அல்லாமல் அரசின் தூதுவராகவே யாழ்ப்பாணம் செல்ல விரும்புகிறேன். நான் அங்கு செல்வதற்கான சூழ்நிலையை விடுதலைப்புலிகளும் ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எம். எச். எம் அஷ்ரப் தெரிவித்ததாக கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அண்மையில் அமைச்சர் அஷ்ரப்பை சந்தித்து யாழ். வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

"இந்த அழைப்பை ஏற்று யாழ். செல்வீர்களா?" என அஷ்ரப்பிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

யாழ். மக்கள் சமாதானத்தை விரும்பும் செய்தியை ஆயர் என்னிடம் தெரிவித்தார்; என்னை யாழ் வருமாறும் அழைத்தார். அந்த அழைப்பை ஏற்று யாழ் செல்ல நான் விரும்புகிறேன். அந்த அழைப்பு மட்டும் போதாது. விடுதலைப்புலிகளும் நான் அங்கு செல்வதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

தனி அஷ்ரப்பாக நான் அங்கு போகவிரும்பவில்லை. அரசின் பிரதிநிதியாக – உத்தியோகபூர்வமாக – செல்லவே விரும்புகிறேன். விடுதலைப்புலிகள் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தினால், அரசிடம் பேசி அதன் சம்மதத்தைப் பெற்று உத்தியோகபூர்வமான பிரதிநிதியாக அங்கு செல்வேன் – என்றார் அஷ்ரப். (ஓ-9)

கிளாலி பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஓ. 31

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஓ-3)

பொ. ஐ. மு. அரசில் சேரும் தொண்டா முயற்சி தோல்வி

சண்டே லீடர் தகவல்

கொழும்பு. ஓ. 31

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சேருவது பற்றி நடந்த பேச்சுக்கள் கடந்த 23 ஆம்திகதி தோல்வியில் முடிந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சுக்கள், வர்த்தகர் ஒருவரின் ஏற்பாட்டில — கடந்த தேர்தலில் முன்னணியின் வேட்பாளராகப்போட்டியிட்ட சட்டத்தரணி ஒருவரின் முயற்சியினால் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகின.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவளிக்க திரு. தொண்டமான் விதித்த நிபந்தனைகள் முன்னணியின் தலைமைப் பீடத்தினால் ஏற்றுக் கொள்ளப்படாததை அடுத்து இம் முயற்சி தோல்வி கண்டதாக "சண்டே லீடர்" தெரிவிக்கிறது.

"இ. தொ. காவுக்கு அமைச்சர் பதவி ஒன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

வாகன வரி அட்டை பெற கால எல்லை நீடிப்பு

10ஆம் திகதிக்கு முன் சட்டநடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் மோட்டார் வாகனங்களுக்கான 94 ஆம் ஆண்டு வரி அட்டை பெற்றுக் கொள்வதற்கான கால எல்லை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத் திகதிக்குப் பின்னர் வரி அட்டை இன்றி வீதிகளில் செல்லும் மோட்டார் வாகனங்களின் உரிமையாளர்கள் மீது தமிழீழ காவல்துறையினரும் மோட்டார் வாகனப் பதிவுப் பகுதியினரும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வர் என்று போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

வாகன உரிமையாளர்கள் வரி அட்டையை ஒவ்வொரு உதவி அரசஅதிபர் பிரிவிலும் விசேடமாக இயங்கும் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஓ)

முச்சந்தி முனி



உவர் அனுராவுக்கு பிறந்த வீடும் பிடிக்கவில்லை...... புகுந்த வீடும் பொருந்த வில்லைப்போல......]

ஐ. தே. கவிலிருந்து அனுரா விலகுவார்?

கொழும்பு, ஓகஸ்ட் 31

அனுரா பண்டாரநாயக்கா தமது எம். பி. பதவியிலிருந்தும் ஐ. தே. க. அங்கத்தவர் பதவியிலிருந்தும் விரைவில் விலக விரும்புவதாக ஐ. தே. க. வட்டாரங்களை மேற்கோள் காட்டி "யுக்திய" சிங்கள வாரஇதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவின்போது காமினிக்கு எதிராக — ரணிலை ஆதரித்து — முன்னணியில் நின்று செயல்பட்டவர் அனுரா.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவராக காமினியே தெரிவு செய்யப்பட்டார்.

இதனால் மனமுடைந்துள்ள அனுரா தாம் பதவி விலகப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பொருளாதாரத் தடையை நீக்குவது குறித்து

ராணுவ தளபதிகளுக்கிடையே கருத்து வேறுபாடு இல்லை!

இராணுவப் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, ஓ. 31

வடபகுதி மீதான பொருளாதாரத் தடை நீக்குவது குறித்து இராணுவத் தளபதிகளுக்கு இடையே எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை.

இராணுவத் தலைமையகப் பேச்சாளரான பிரிகேடியர் சேருனு குலதுங்கா முன்கண்டவாறு நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

பொருளாதாரத் தடையை நீக்குவது குறித்து இராணுவத் தளபதிகளுக்கு இடையே அபிப்பிராய பேதம் உள்ளதா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

ஆட்சியில் உள்ள அரசு எவ்வித சட்ட விதிகளைப் பிறப்பித்தாலும் அவற்றை ஏற்று செயற்படுத்துவதற்கு இராணுவம் கட்டுப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தம் பற்றி அரசு எப்போது முடிவெடுத்தாலும் அதற்கமையச் செயல்பட இராணுவம் கட்டுப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தம் பற்றிய இராணுவத்தின் கருத்தை அரசுக்கு இராணுவத் தளபதி தெரியப்படுத்துவார்.

இத்தகைய யுத்தத்தில் இற

(6 ஆம் பக்கம் பார்க்க)

படை உயர் அதிகாரிகளிடம் அபிப்பிராயம் கேட்கப்படுகிறது

பொருளாதாரத் தடைநீக்கம், யுத்தநிறுத்தம் மற்றும் அரசியல் தீர்வு காணப்படுதல் ஆகியன குறித்த அபிப்பிராயங்களை தெரிவிக்கும்படி விமானப்படை மற்றும் கடற்படைத் தளபதிகள் தத்தமது படை அதிகாரிகளுக்கு பணிப்புரைகளை அனுப்பியுள்ளனர்.

இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா இதே மாதிரியான பணிப்புரையை தமது பிராந்திய தளபதிகள், இராணுவ இணைப்பதிகாரிகள் மற்றும் போர்முனைகளில் செயல்படும் அதிகாரிகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளார்.

பிரதமரைச் சந்திக்கும் முன்னர்

தளபதி ஜெரி தலைமையில் ராணுவ அதிகாரிகள் மாநாடு

கொழும்பு, ஓ. 31

நாளை நடைபெறவிருக்கும் பிரதமர் தலைமையிலான பாதுகாப்பு உயர் நிலை மாநாட்டுக்கு முன்னோடியாக — [illegible] இராணுவத் தளபதி [illegible] ஜெரி டி சில்வா தலைமையில் இராணுவத்தின் பிராந்தியத் தளபதிகள், பொதுக் கட்டளைத் தளபதிகள், இராணுவ இணைப்பதிகாரிகள் மற்றும் வடக்கு–கிழக்கு பகுதிகளில் பணிபுரியும் இராணுவ உயர் நிலை அதிகாரிகள் அடங்கிய மாநாடு நேற்று நடைபெற்றிருக்கிறது.

பலாங்கொட பொலீஸ் நிலையம் அருகில்

கிரனேட் வெடித்து மூவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஓ. 31

பலாங்கொட பொலீஸ் நிலையத்துக்கு அருகில் கிரனேட் குண்டு ஒன்று வெடித்ததில் மூவர் கொல்லப்பட்டனர்.

கடை ஒன்றின் அருகில் கடந்த ஞாயிறு காலை இச்சம்பவம் இடம்பெற்றது. கொல்லப்பட்டவர்களில் இருவர் தந்தையும் மகளும் ஆவர்.

கவனிப்பாரற்றுக் கிடந்த கிரனேட்டின் ஊசியை விஷயம் தெரியாது இவர்கள் அகற்றியதைத் தொடர்ந்து அது வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-ம)

பொருளாதாரத் தடைகளை நீக்குமாறு

கோருகிறார் கனேடிய சட்டத்தரணி

கொழும்பு, ஒக. 31

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை உடனடியாக நீக்கும்படி பிரபல கனேடிய சட்டத்தரணி மாக்ஸ் வெர்ஜர் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்மாதம் 26 ஆம் திகதியிடப்பட்டு அவருக்கு அனுப்பிய கடிதத்தில் திரு. வெர்ஜர் இவ்வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

சந்திரிகாவுக்கு கடிதம்

அவர் அக்கடிதத்தில் மேலும் கூறியிருப்பதாவது;

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேசப்போவதாக தாங்கள் உறுதியளித்திருப்பது கனடாவில் உள்ள தமிழ் மக்களினால் மட்டுமல்ல கனடா நாடாளுமன்ற உறுப்பினர்களினாலும் மக்களாலும் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

விதி உங்களுக்கு பொன்னான சந்தர்ப்பம் ஒன்றைத் தந்துள்ளது. நாட்டைக்கட்டியெழுப்புபவராக, சமாதானத்தை உருவாக்குபவராக நீங்கள் முன்வந்து செயல்பட வேண்டும்.

இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று எதிர்பார்த்திருப்பவர்களின் பாராட்டுதலையும் மதிப்பையும் இதன் மூலம் நீங்கள் பெறுவீர்கள்.

வடபகுதி மக்கள் உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடுகளினால் படும் இன்னல்களுக்குக் காரணமான பொருளாதாரத் தடை பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

உங்கள் அரசின் நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அழகான உங்கள் நாட்டில் அமைதி ஏற்படுவதற்குத் தடையாக உள்ள முட்டுக் கட்டைகளில் ஒன்றான பொருளாதாரத் தடையை நீங்கள் அகற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். [இ-எ]

இந்துமாமன்றக் கட்டடம் ஜனவரியில் திறந்துவைப்பு

காஞ்சிப் பெரியார் வருகிறார்

கொழும்பு, ஒக 31

கொழும்பு சேர். சிற்றம்பலம் காடினர் மாவத்தையில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டடம் எதிர்வரும் தைப்பூசத் திருநாளன்று காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளினால் திறந்து வைக்கப்படும்.

ஆறு மாடிகளைக் கொண்ட இக்கட்டடத்தின் ஆறாவது மாடியில் வழிபாட்டுக் கூடமும் நவீன வசதிகள் கொண்ட மண்டபமும் அமைக்கப்பட்டு வருகின்றன.

கட்டடக் கலைஞர் வி. எஸ். துரைராஜா இந்த கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கட்டட நிர்மாண அமைப்பை வடிவமைத்துள்ளார்

இக் கட்டடத்தைப் பூர்த்தி செய்ய மேலும் 50 லட்சம் ரூபா தேவைப்படும் என்றும்—

இதனைச் சேகரிக்கும் முயற்சியில் மன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

கடற்புலிகளின்

'கடலிலே காவியம் படைப்போம்'

நாளை வெளியீட்டு விழா

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் வெளியீடான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் உருவாக்கிய பாடல் ஒலிப்பதிவு நாடாவான 'கடலிலே காவியம் படைப்போம்' நாளை வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு யாழ் / பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கத்தில் வெளியிடப்படவுள்ளது.

கடற்புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி நளாயினி தலைமையில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக துணைப் பொறுப்பாளர் திரு. சி. சேரலாதன் வெளியீட்டுரையையும், பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆய்வுரையையும், திரு. ந. வீரமணி ஐயர் ஆகியோர் மதிப்பீட்டுரைகளையும், திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன் நன்றியுரையையும் நிகழ்த்துகின்றனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் ஒலிநாடாவை வெளியிட்டு வைக்க விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் சிறப்புத் தளபதி திரு. சூசை ஒலிநாடாவில் பங்கேற்ற கலைஞர்களுக்கு கௌரவமளிப்பார்.

மிக நவீன கணனிக் கருவிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த ஒலிநாடாவில் கவிஞர்களான புதுவை இரத்தினதுரை, வாஞ்சிநாதன், வி பரந்தாமன் ஆகியோரின் பாடல்களுக்கு ஈழத்தின் தலைசிறந்த இசையமைப்பாளர் திரு. கண்ணன் இருபதுக்கு மேற்பட்ட இசைக் கலைஞர்களுடன் இணைந்து இசையமைத்துள்ளார். தமிழீழத்தின் முன்னணிப் பாடகர்களான சிட்டு சுகுமார், சாந்தன் வரணி சிவானந்தன், நிரோஜன், விஜயகுமார், செல்வி விஜயலட்சுமி ஆகியோர் பாடியுள்ளனர்.

கடலெங்கும் வீரகாவியம் படைத்துவரும் கடற்புலிகளின் மகத்தான சாதனைகளை கடற் கரும்புலிகளின் உன்னத ஈகங்களை, நெய்தல் நில மக்களின் அவலங்களை, அவர் தம் தளராத உறுதியினை இப் பாடல் ஒலிப்பதிவு நாடாவில் உள்ள பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

தமிழ் மக்களுக்கு விடுதலைப் புலிகள், கலை. பண்பாட்டுக்கழகம் செய்தளிக்கும் பத்தாவது ஒலிப்பதிவு நாடாவான 'கடலிலே காவியம் படைப்போம்' வெளியீட்டு விழாவுக்கு அனைத்துத் தமிழ் மக்களையும் வந்து கலந்துகொள்ளுமாறு கடற்புலிகளும், கலை. பண்பாட்டுக் கழகமும் அழைப்பு விடுத்துள்ளன. (இ)

கோடீஸ்வரர்களான

எட்டு அரசியல்வாதிகள் மீது லஞ்ச,ஊழல் முறைப்பாடுகள்

விசாரணைகள் ஆரம்பமாகின

கொழும்பு, ஒக. 31

ஒரு பெண்மணி உட்பட பதவிக்கு வந்த பின்னர் கோடீஸ்வரர்களாகியுள்ள எட்டு அரசியல் வாதிகளுக்கு எதிராக லஞ்ச முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளன என லஞ்ச ஆணையாளர் தெரிவித்திருக்கிறார்.

இவர்களில் சிலர் கடந்த ஐ.தே.க. அரசில் அமைச்சர் பதவிகளை வகித்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

லஞ்சக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்த அரசியல்வாதி ஒருவர் தொடர்பான "கோவை" அவரின் மரணத்தின் பின்னர் மூடப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அரசியல்வாதிகளுக்கு எதிரான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-4-6) (உ-எ)

தேர்தல்கால செயற்பாடுகள்;

லேக்ஹவுஸ், ரூபவாஹினி குறித்து விசாரணை

கொழும்பு ஒக 31

தேர்தல் காலத்தில் அரச தொடர்பு சாதனங்களான லேக்ஹவுஸ் பத்திரிகைகள், ரூபவாஹினி மற்றும் சுயாதீன தொலைக்காட்சிச் சேவைகள் தேர்தல் விதிகளை மீறிச் செயற்பட்ட விதம் குறித்து விசாரணை நடத்தும்படி அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவை அரசாங்கம் கேட்டுள்ளது.

இதனை அடுத்து லேக்ஹவுஸ் நிறுவன நடவடிக்கைகளை விசாரிக்கும்படி அந்நிறுவனத்தின் புதிய தலைவர் லயனல் பெர்னான்டோவை அமைச்சர் பணித்திருக்கிறார்.

ரூபவாஹினி மற்றும் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் விசாரணை செய்யும்படியும் அமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார். (உ-எ)

நேர்முகப்பரீட்சை நடத்தாமல் 4000ரிசேவ் படையினர் தெரிவு

கொழும்பு, ஒக. 31

கடந்த இரண்டு ஆண்டுகளாக, முறையான நேர்முகப் பரீட்சைகளின்றி 4 ஆயிரத்துக்கு அதிகமான ஆண்களும், பெண்களும் இலங்கை பொலீஸ் ரிசேர்வ் படைக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள் மற்றும் அரசியல் வாதிகளின் பணிப்புரைகளுக்கு அமைய இவ் பொலீஸ் ரிசேர்வ் படைக்கு ஆட்திரட்டப்பட்டனர் என்று, படையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முறையான நேர்முகத் தேர்வின்றி கடந்த காலத்தில் ரிசேர்வ் பொலீஸார் திரட்டப்பட்டதால், அவர்களை நிரந்தர பொலீஸ் படைக்கு சேர்க்கும் போது பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிரந்தரப் பொலீஸ் படையில் இருந்து ஓய்வுபெற்ற 100க்கு அதிகமான பொலீஸ் அதிகாரிகளும் பொலீஸ் தலைமைக் காரியாலத்தில் இருந்து ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்களும் ரிசேர்வ் பொலீஸ் படையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் —

அவர்களுக்கு மாதாமாதம் 60 லட்சம் ரூபா சம்பளமாக கொடுக்கப்பட்டு வருவதாகவும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு

ஆளுநராக தமிழரை நியமிக்க சந்திரிகா விருப்பம்!

கொழும்பு, ஒக. 31

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக தமிழர் ஒருவரை நியமிக்க பிரதமர் சந்திரிகா விருப்பம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழ்க் கட்சிகளுடன் அவர் தற்சமயம் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

வடமத்திய மாகாண ஆளுநராக தற்போது கடமையாற்றிய ஈ. எல். பி. ஹுருல்லேயை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக மாற்றும் யோசனை முன்வைக்கப்பட்டது.

இப்போது தமிழர் ஒருவரையே இப்பதவிக்கு நியமிக்க பிரதமர் விரும்புவதால் இப்பதவி இன்னும் நிரப்பப்படாமல் உள்ளது.

இம்மாகாணத்தின் ஆளுநராகக் கடமையாற்றிற லைனல் பெர்னாண்டோ தகவல், ஒலிபரப்பு அமைச்சின் செயலாளராக பதவியேற்றுள்ளது தெரிந்ததே. (ஓ-எ)

ஐ. தே. கவுக்கு

17 வருடகாலத்தில் குறைந்த வாக்குகள்

கொழும்பு, ஒக. 31

1977 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் இடம்பெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலிலேயே ஐக்கிய தேசியக்கட்சி ஆகக் குறைந்த சதவீத வாக்குகளைப் பெற்றது.

இத்தேர்தலில் 17 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த ஐ. தே. க. பெற்ற வாக்குகள் 44.04 சதவீதமாகும்.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இக்கட்சி 49.52 சதவீத வாக்குகளைப் பெற்றது.

ஏனைய தேர்தல்களில் ஐ. தே. க பெற்ற வாக்குகள் —

1982 — சர்வசனவாக்கெடுப்பு — 52 91 சதவீதம்

1983 — ஜனாதிபதி தேர்தல் மாகாண சபைத் தேர்தல் 54 75

1988 — ஜனாதிபதி தேர்தல் — 50 43

1989 பொதுத் தேர்தல் — 50.71

1991 உள்ளூராட்சித் தேர்தல் 51 02

1993 மாகாணசபைத் தேர்தல் — 47.86

(இ-எ)

உண்ணாவிரதிகளிடம் பாதுகாப்புக் கட்டணம்

சென்னையில் புதிய நடைமுறை

சென்னை, ஒக. 31

சென்னை மாநகரில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துபவர்கள் பொலீஸாருக்கு பாதுகாப்புக் கட்டணம் செலுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை பொலீஸ் ஆணையாளர் ராஜகோபாலன் இவ்வுத்தரவைப்பிறப்பித்திருக்கிறார்.

சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை அருகில் — குறளகத்துக்கு எதிரில் — வள்ளுவர் கோட்டத்துக்கு அருகில் — தியாகராய நகர் பனகல் பூங்காவுக்கு அருகில் — மட்டுமே இனி சென்னை நகரில் உண்ணாவிரதம் இருக்கலாம் என்று பொலீஸார் அறிவித்துள்ளனர்.

பொலீஸ் ஆணையாளரின் உத்தரவுப் படி சென்னையில் உண்ணாவிரதம் இருக்க அனுமதி கோரும் அரசியல் கட்சிகள் தொழிற் சங்கங்கள், அமைப்புகள் பொலீஸ் பாதுகாப்புப் பெறவே இக்கட்டணம் அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உண்ணாவிரதத்துக்கு இரண்டு கான்ஸ்டபிள்களும் இரு தலைமை கான்ஸ்டபிள்களும் பாதுகாப்பு வழங்குவர் எட்டுமணி நேரம் பாதுகாப்பு வழங்குவதற்கு கான்ஸ்டபிள் ஒருவருக்கு 20 ரூபா வீதமும் தலைமைக் கான்ஸ்டபிளுக்கு 30 ரூபா வீதமும் பாதுகாப்புக் கட்டணம் வழங்கவேண்டும். இந்த மொத்தத் தொகையில் பத்துச் சதவீதம பாதுகாப்பை மேற்பார்வை செய்யும் உயர் பொலீஸ் அதிகாரிக்கு வழங்கப்பட வேண்டும்.

கட்டணம் செலுத்தப்பட்டால் மட்டுமே உண்ணாவிரதத்துக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்படும். இல்லாவிடில் உண்ணாவிரதம் [illegible]

—இப்புதிய உத்தரவை எப்படி அமுலாக்க முடியும் என்று சில பொ[illegible] (இ-எ)

அரச அதிபர் கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம், ஒக 31

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நாளை வியாழக்கிழமை [illegible] கொழும்பு செல்கிறார்.

அரசு அனுமதி அளிக்கும் பட்சத்தில், அவர் எதிர்வரும் 16, 17 ஆம் திகதிகளில் லண்டனில் நடக்கவிருக்கும் — வடக்கு — கிழக்கு சுகாதார நிலைமை குறித்த மாநாட்டில் கலந்து கொள்ள அங்கு செல்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-8)

பரிவுபசாரம்

தென்மராட்சி பிரதேசத்தில் 30 ஆண்டுகளாக கிராம அலுவலராகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு க. குமாரசாமியைக் கௌரவித்து பிரதேச செயலக ஊழியர் நலன் புரிச் சங்கம் அண்மையில் பிரிவுபசார விழா ஒன்றை நடத்தியது. (க-117)

நிர்வாக சேவை 1ஆம் வகுப்புக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம் ,ஒக, 31

யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் வகுப்புக்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

92 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா அரச அதிபராக பணியாற்றிய இவர் நிர்வாக சேவையில் பல பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-8)

தபால் அமைச்சு செயலாளர் ராஜினாமா

கொழும்பு, ஒக. 31

தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சின் செயலாளர் அசோகா டி குணசேகரா தமது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அவரை பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்று அமைச்சு ஊழியர்கள் புதிய அமைச்சர் மங்கள சமரவீரவைக் கேட்டதை அடுத்தே திரு குணசேகரா ஓய்வில் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 31

புத்தூர் விசாலாட்சி சமேத விஸ்வநாத தேவஸ்தானத்தின் திருவிழா காலத்தில் 10 நாட்கள் மகாபாரதம் தொடர் இசைச் சொற்பொழிவு நடத்திய பிரம்மஸ்ரீ சி. வை. நித்தியானந்த சர்மாவைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. (க)

பாடசாலைகள் ஆரம்ப தினம்

யாழ்ப்பாணம், ஒக 31

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று மேற்படி கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

★ ★ ★

தென்மராட்சி, ஒக 31

பளை கல்விக் கோட்டப் பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக நாளைவியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப் படுமெனபளைகல்விக்கோட்ட உதவி பணிப்பாளர் ப. அரியரத்தினம் அறிவித்துள்ளார். (ஐ-117)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக. 31

சண்டிலிப்பாய், தெல்லிப்பழை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகள் அனைத்தும் இரண்டாம் தவணைக்காக எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகுமெனக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

திருவருள் மிகு கரைப்பிரான்
ஆதிவிநாயகர் தேவஸ்தானம்
ஆனைக்கோட்டை
மகா கும்பாபிஷேகம்

காலம்:- 02 - 09 - 94 வெள்ளிக்கிழமை
நேரம்:- காலை 6-58 முதல் 8-10 வரை

பிரதிஷ்டா பிரதமகுரு "கிரியா ஜோதி"
பிரம்மஸ்ரீ சு. தியாகராஜாக்குருக்கள்
(ஆனைக்கோட்டை)
அருளாசி வழங்குபவர் "சிவஞான பாஸ்கரன்"
பிரம்மஸ்ரீ த. மஹாதேவக் குருக்கள்
(இணுவில்)
முகூர்த்த நிர்ணயம் 'பிரதிஷ்டா வித்வத்ஜோதி'
பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள்
(அரியாலை)
எண்ணெய்க்காப்பு 01 - 09 - 94 வியாழன் காலை
7-00 மணி முதல் 2-00 மணி வரை
அடியார்கள் அனைவரும் வருக
ஈஸ்வரன் அருள் பெறுக
(32648) சோம. சிவகுமாரசர்மா

தவறாது
நல்லூருக்கு
வாருங்கள்
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவன
கண்காட்சியைப்
பாருங்கள்
பரிசுப் போட்டி ஒன்று
காத்திருக்கிறது!
உங்களுக்கு
பெறுமதி மிக்க பரிசுகள்
கிடைக்கும்!
போட்டி விவரங்கள்
கண்காட்சி வாசலில்
தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு
நிறுவனம்
[சி-8968]

தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனம்
இணுவில்
சிறு கைத்தொழில் நிலையம்

மேற்படி இணுவில் சிறு கைத்தொழில் நிலையத்தின் கண்காட்சி இன்றும், நாளையும் [31.01] நிலையத்தில் நடைபெறும். [இணுவில் வைத்தியசாலைக்கு முன்பாக]. அத்துடன் புதிய பயிற்சிக்கான விண்ணப்பங்களும் கோரப்படுகின்றன விண்ணப்பப்படிவங்களை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
(32651)

கண்ணீர் அஞ்சலி
திருமதி சந்திரவதனி சண்முகானந்தா
(ஆசிரியை யா / வீமன்காமம் ம. வி.)

நேர்மை, தூய்மை, கடமை, பொறுமை ஆகிய நற்பண்புகள் பொருந்தி ஆசிரியருக்கு இலக்கணமாய் திகழ்ந்து, அரும்பணி ஆற்றி இளம் வயதில் இறைவனடி சேர்ந்த திருமதி சந்திரவதனி சண்முகானந்தா அவர்களின் பிரிவால் துயருறும் கணவன், பிள்ளைகள், உற்றார், உறவினருக்கு எமது அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர். பழைய மாணவர்,
பெற்றோர் ஆசிரியர் சங்கம்
(7620)

16 ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்
பிறப்பு 06-09-1931
இறப்பு 16-08-1994
அமரர் பொன்னம்பலம் கந்தசாமி

இவரது இல்லத்தில் இன்று (31—08 - 1994) புதன்கிழமை நடைபெறும் கிரியைகளில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்.
குடும்பத்தினர்.
"மகேந்திரா வீடு,"
பூமரீமடம், கோப்பாய் வடக்கு.
கோப்பாய். (32650)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

நரோமா பயணிகள் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், ஓக 31

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறைக்கு வரவிருக்கும் 'நரோமா' கப்பலில் பயணம் செய்ய செயலகத்தில் பணம் செலுத்திய பயணிகளை அன்று காலை 8 மணிக்கு பருத்தித்துறை இறங்கு துறைக்கு வருமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (ஞ-3)

ஓர் அமைச்சருக்கு 20 வாகனங்கள்

கொழும்பு, ஓக. 30

ஐ. தே. க. அரசில் அங்கம் வகித்த அமைச்சர்கள் சிலர் பதினைந்து முதல் இருபது ஆடம்பர வாகனங்களை அரசுச் செலவில் தங்களின் சொந்தப் பாவனைக்குப் பயன்படுத்தி வந்தனர் என்று நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆடம்பர வாகனங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சகளிடம் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும் என்று பிரதமர் சந்திரிகா தற்போது உத்தரவிட்டிருக்கிறார். (இ-எ)

தேர்தல் சபதம்:

17 ஆண்டின் பின் சவரம் செய்து முடிவெட்டிய நபர்!

கொழும்பு, ஓக. 29

தேர்தலில் சுதந்திரக் கட்சி தலைமையிலான பொ. ஐ. முன்னணி ஆட்சி வந்ததும்— கடந்த 17ஆண்டுகளின் பின்— தலை முடி வெட்டி, தாடி வழித்து தமது சபதத்தை நிறைவேற்றினார் உடுநுவர வாசியான சமரசிங்க என்ற நபர்.

50 வயதுடைய இந்த நபர் 1977ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சி தோல்வி கண்டபோது பூண்ட சபதமே இப்போது நிறைவேறியுள்ளது. [ஞ-9]

வவுனியா கல்வியியல் கல்லூரி

யாழ்ப்பாணம், ஓக. 31

வவுனியா கல்வியியல் கல்லூரி எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்லூரி பீடாதிபதி செ. அழகரத்தினம் அறிவித்துள்ளார்:

இக்கல்லூரி முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

கோமாரியில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், ஓக. 31

நேற்று முன் தினம் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த 'கோமாரி' கப்பலில் 445 தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை துறைமுகத்தில் தற்போது 'மாஹோ' கப்பலில் இருந்து பொருட்கள் இறக்கப்பட்டு வருவதால் இக்கப்பல் காங்கேசன் துறையில் தரித்து நிற்கிறது.

கொழும்பில் தேங்கிக் கிடந்த அனைத்து தபால் பொதிகள், மற்றும் ஒரு ரூபா முத்திரைகள், வான் கடிதங்கள் என்பன இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் தெரிவித்தார். [ஞ-4]

'வேதமுரசு' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக 31

''வேதமுரசு'' நூல் வெளியீடு நாளை வியாழக்கிழமை காலை 11மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் திரு. வே. கெ. தனபாலன் தலைமையில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வரின் அருளுரையும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆசியுரையும் இந் நிகழ்வில் இடம் பெறும்.

திரு. மு. கி. யோகேந்திரம் வெளியீட்டுரையையும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவார்கள். (ஈ)

கௌரவிப்பு

சாவகச்சேரி, ஓக. 31

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவத்தின் போது தொடர் கம்பராமாயண விரிவுரை நிகழ்த்திய ''இலக்கியச் செம்மல்'' க. நாகேஸ்வரன் கடந்த ஞாயிறு மேற்படி ஆலய முன்றிலில் நடைபெற்ற பாராட்டு நிகழ்வில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

தேர்தலுக்கு 4 தினங்களுக்கு முன் சிசில் கொழும்பு வந்த நோக்கம்?

உயர்நிலை விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஓக 31

தாய்லாந்தில் இலங்கைத் தூதராகப் பணிபுரியும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா, தேர்தல் தினத்துக்கு முன்பு கொழும்புக்கு விஜயம் செய்ததன் பின்னணி என்ன? இதுபற்றி உயர் நிலை விசாரணை ஒன்றை பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆரம்பித்துள்ளது.

இந்த 'மர்ம' விஜயம் அம்பலமானதை அடுத்து, சிசில் வைத்தியரத்னா அவசரமாக நாட்டைவிட்டு வெளியேறினார்.

சிசில் வைத்தியரத்னா கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் பாங்கொக்கில் இருந்து எயர்லங்காவின் யு எல் 423 விமானமூலம் கொழும்பு வந்தார் என்பதையும்—

அவர் 15ஆம் திகதி- அதாவது தேர்தலுக்கு முதல் நாள் எயர்லங்காவின் யு. எல் 402 விமான மூலம் பாங்கொக் திரும்பினார் என்பதையும் புதிய அரசு உறுதி செய்துள்ளது.

ஜெனரல் வைத்தியரத்னா உத்தியோக காரணங்களுக்காக இலங்கை வந்தாரா?—

அவரை யார் வரும்படி அழைத்தனர்?

அப்படி இல்லாதவிடத்து, அவரது விஜயம் தனிப்பட்ட ஒன்றாக இருப்பின் அவரது விஜயத்தை இரகசியமாக வைத்திருந்தது ஏன்?

அவர் கொழும்புக்கு வரவில்லை என்று பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டது ஏன்?

—இவை எல்லாம் தற்போது விசாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் தூதர்கள் தேர்தல் காலத்தில் தத்தமது நாடுகளில் இருக்க வேண்டும் என்ற வெளியுறவு அமைச்சின் கட்டளையை மீறி ஜெனரல் வைத்தியரத்னா கொழும்பு வருவதற்கு உத்தியோக பூர்வ விடுமுறை பெற்றிருந்தாரா என்பது குறித்தும் விசாரணை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

வைத்தியரத்னா கொழும்பில் தங்கியிருந்தபோது அவரை, இராணுவத்தில் இருந்து விலக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் தேர்தலுக்காக கொழும்புக்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் சென்று சந்தித்த இராணுவ அதிகாரிகள் குழுவின் நோக்கம் பற்றியும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

கிழக்கில் தொடரும் குண்டு வெடிப்புகள்

கொழும்பு, ஓக 31

கல்முனை பகுதியில் உள்ள மாளிகைக் காடு முஸ்லிம் கிராமத்தில் கடந்த சனிக்கிழமை காலை குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

இதற்கு முதல் நாளான வெள்ளிக்கிழமை மாளிகைக் காடு அருகில் உள்ள சாய்ந்தமருது கிராமத்தில் மூன்று குண்டுகள் வெடித்தன.

வியாழக்கிழமை அட்டாளைச்சேனையில் கட்சி ஆதரவாளர் ஒருவரின் வீட்டுக்கு இனந்தெரியாதோரினால் குண்டு வீசப்பட்டது.

கல்முனை முஸ்லிம் பகுதியில் அடிக்கடி இடம் பெறும் குண்டு வெடிப்புச் சம்பவங்களினால் அப்பகுதியில் பதற்ற நிலை நிலவுகிறது. (இ)

இனப்பிரச்சினை தீர்வு;

சந்திரிகாவின் நடவடிக்கைக்கு லண்டன் ரைம்ஸ் பாராட்டு

கொழும்பு, ஓக. 31

விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களை நடத்த தயாராக இருப்பதாக பிரதமர் சந்திரிகா அறிவித்திருப்பது ஊக்கத்தைத் தருகின்றது. இது சரியான அணுகுமுறையாகும். உண்மையில் ஒரே ஒரு அணுகுமுறையும் இதுவே;

லண்டன் ரைம்ஸ் பத்திரிகை தனது ஓகஸ்ட் 19 இதழில் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் முன்கண்டவாறு தெரிவித்துள்ளது.

'இன்னொரு பண்டாரநாயக்கா' என்ற தலைப்பில் அந்த தலையங்கம் எழுதப்பட்டிருந்தது.

'இலங்கைக்கு துணிச்சலான தலைவர் ஒருவர் தேவை. அப்படியான ஒருவர் பண்டாரநாயக்கா குடும்பத்தைச் சேர்ந்த சந்திரிகாவில் தெரிகிறது.

தமிழர் பிரச்சினையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அணுகுமுறையில் புத்திக் கூர்மையும் இணக்கம் காணும் போக்கும் குறைந்தே காணப்படுகின்றன.

இந்த நிலையில் சந்திரிகா எதிர்நோக்கும் கடினமான பணியாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது அமைகின்றது.

பிரதமர் பதவிக்கு புத்திஜீவித் தன்மையை சந்திரிகா கொடுத்துள்ளார்.

அரசியலில் அவர் காட்டும் துணிச்சலும் அவரின் சர்வதேச பார்வையும் அவருக்கு மேற்கு ராஜதந்திரிகளிடையே நன்மதிப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

இவ்வாறு லண்டன் ரைம்ஸ் எழுதியுள்ளது. (இ-எ)

வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணியில்

கிராமசேவை உத்தியோகத்தர் இனி ஈடுபடுத்தப்பட மாட்டார்கள்

அரசியல் கட்சிகளுடன் பேசி புதிய திட்டம் வரும்

வாக்காளர் பட்டியலை தயாரிக்கும் பணி எதிர்காலத்தில் கிராமசேவை உத்தியோகத்தர்களிடம் விடப்படமாட்டாது.

சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, புதிய முறை ஒன்று வகுக்கப்பட இருப்பதாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு எதிராக நாடெங்கும் இருந்து பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றும்—

கடந்த தேர்தலின் போது வாக்காளர் பட்டியலில் இருந்து சுமார் 3லட்சம்பேரின் பெயர்கள் தவிர்க்கப்பட்டதற்கு கிராமசேவை உத்தியோகத்தர்களே பொறுப்பு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம சேவை உத்தியோகத்தர் சேவையில் பல மாற்றங்கள் செய்யப்பட உள்ளன என்றும் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார். (இ)

ரகசிய தடுப்பு நிலையம் எதுவும் நாட்டில் இல்லை

ராணுவத் தளபதி ஜெரி கூறுகிறார்

கொழும்பு. ஓக 31

ஸ்ரீலங்கா இராணுவம் இரகசியத் தடுப்பு நிலையம் எதனையும் நாட்டில் வைத்திருக்கவில்லை என்று இராணுவத் தளபதி ஜெரிடிசில்வா மனித உரிமைகள் பணியகத்துக்கு அறிவித்திருக்கிறார்.

பணியகத்தின் தலைவர் ஜே எப். என். சூஸா எழுதிய கடிதத்துக்கு அனுப்பிய பதிலில் தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பணியகத்தின் தலைவர் இராணுவத் தளபதிக்கு அனுப்பிய கடிதத்தில்—

கொழும்பு இந்தியத் தூதரகத்துக்குப் பின்னால் உள்ள கட்டடம் ஒன்றில் இராணுவத்தின் இரகசியத்தடுப்பு நிலையம் இருப்பதாகக் கூறப்படுவது பற்றி விசாரணை நடத்தும்படி தாம் கேட்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

அவசரகாலச் சட்டம் காலாவதியானதும் சாட்சியங்கள் வெளிவராமல் இருப்பதை உறுதி செய்வதற்காக இரகசிய தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் இரகசியமாகக் கொல்லப்பட்ட பின்னர் அவர்களின் உடல்கள் அழிக்கப்படலாம் என்ற அச்சம் நிலவுவதாகவும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இக்கடிதத்துக்கு அனுப்பிய பதிலில்— ''கொழும்பில் இந்தியத் தூதரகத்தின் பின்னால் 12ஆவது ராணுவப் படையணியின் தலைமை அலுவலகம் உள்ளது.

அங்கு சந்தேக நபர்கள் இரகசியமாக தடுத்து வைக்கப்படும் முகாம்கள் எவையும் இயங்கவில்லை.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் நபர்கள் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் குறிக்கப்பட்ட இடங்களில் தான் தடுத்துவைக்கப்படுகின்றார்கள்''— என்று இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார். (இ-எ)

புலிகளின் குரல் வானொலியில்

31 – 08 – 1994

புதன் இரவு

- ★ 8-01 — குயிலோசை - கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நாட்டுப்புறக் கலைகள்
- ★ 8-20 ஏர்முனை—''பயிர் நடுகை முறைகள்'' கேள்வி பதில்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — எல்லாளன் நாடகத்தின் தொடர்ச்சி

01 – 09 – 1994

வியாழன் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

என என்றும்—

விசாரணைக்குப் பயந்து தனது ஜெட்டில் தப்பிய தொழிலதிபர்

கொழும்பு, ஓக 31

இரண்டாயிரம் பஸ்களை ஆயிரம் கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யும் திட்டம் பற்றிய விசாரணைகள் ஆரம்பமாகலாம் என்ற அச்சத்தில் உள்ளூர் பஸ் நிறுவனம் ஒன்றின் அதிபர் தமது சொந்த ஜெட்விமானத்தில் நாட்டைவிட்டு தப்பி ஓடிவிட்டார்.

சண்டே டைம்ஸ் இத் தகவலை வெளியிட்டிருக்கிறது. இந்த பஸ் கொள்வனவில் லட்சக்கணக்கான ரூபா பணம் 'கமிஷனாக' ஐ. தே. க அரசியல் வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் [illegible]ப்பட்டதாகவும் அப்பத்திரிகை தெரிவிக்கிறது. (இ—எ)

பாஸ்கரலிங்கம் இனி கொழும்பு திரும்பமாட்டார்

விடுமுறையில் லண்டனில் தங்கியுள்ள முன்னாள் திறைசேரிச் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் கொழும்பு திரும்பமாட்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ரைம்ஸ்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

தனது எதிர்காலத் திட்டங்கள்பற்றி திரு. பாஸ்கரலிங்கம் புதிய அரசுக்கு அறிவிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் பாஸ்கரலிங்கம் வகித்து வந்த நிதி அமைச்சுச் செயலாளர் பதவிக்கு புதிய அரசு மத்தியவங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் ஏ. எஸ். ஜெயவர்த்தனாவை நியமித்துள்ளது. (இ-எ)

எதிர்ப்புக்கு மத்தியில் புதிய செயலாளர் நியமனம்

நிதி அமைச்சுச் செயலாளராக திரு ஏ எஸ். ஜெயவர்த்தனாவை நியமிப்பதை ஜனாதிபதி விஜேதுங்கா முதலில் எதிர்த்தார் என்றும் —

இறுதியில் பிரதமர் சந்திரிகாவுக்கு ஜனாதிபதி விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்த நியமனம் தொடர்பான முட்டுக்கட்டை நிலை இருவருக்கும் இடையே சில தினங்கள் நீடித்தன என்றும்—

வெளிநாட்டில் தங்கியுள்ள பாஸ்கரலிங்கத்திற்குப் பதிலாக செயலாளராகக் கடமையாற்றும் எவரே வெரகொடையை தொடர்ந்தும் பணிபுரிய அனுமதிக்க வேண்டும் என்று ஜனாதிபதி வற்புறுத்தினார் என்றும் சண்டே ரைம்ஸ்தகவல் வெளியிட்டுள்ளது. (இ-எ)

சவூதி மன்னரின் உதவி பெற

டி. பிக்கு ஆலோசனை கூறியவர் யார்?

கொழும்பு, ஓக,31

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர், ஆட்சியைத் தொடர்ந்து ஐ. தே. க. அரசு நீடிப்பதற்கு சவூதி மன்னரின் துணையை நாடும்படி ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு ஆலோசனை கூறப்பட்டது.

சவூதி மன்னரைக் கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பின் ஆதரவைப் பெறும் படி ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆலோசனையைத் தெரிவித்தவர் இரகசியப் புலனாய்வுத் திணைக்களத்தின பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு எம். டி, அமரசேனராஜபக்ஷ ஆவார்.

இந்த ஆலோசனையைக் கேட்டு ஜனாதிபதி செயலகத்தில் இருந்தோர் விழுந்து விழுந்து சிரித்தனராம்,

63 வயதான ராஜபக்ஷ'வுக்கு கடந்த மாதம் பதவி நீடிப்பு வழங்கப்பட்டதுடன் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவி உயர்வும் கிடைத்தது. [இ-எ]

பொருண்மிய கலை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 31

நல்லூர் பொருண்மியக் கண்காட்சியை முன்னிட்டு தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் தினமும் மாலை 6 மணி தொடக்கம் கூத்து பொம்மலாட்டம், நடனம், நாடகம், வீடியோப்படக் காட்சி போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. (ஈ)

கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஓக. 31

நாளை வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச்செல்பவர்களையும். இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு தண்ணீருடன் அன்று காலை 6 30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கோரி உள்ளார். (இ)

மூலிகை கண்காட்சி

யாழ்ப்பாணம். ஓக 31

யாழ். மாநகராட்சிமன்ற சித்த மருத்துவ பகுதியினரால் நடத்தப்படும் மூலிகைக் கண்காட்சி ஒன்று இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மாநகராட்சி மன்ற சேவைப் பகுதிக்கு முன் அமைந்துள்ள கட்டடத்தில் மாநகராட்சிமன்ற ஆணையாளரால் திறந்து வைக்கப்படும். [ஞ-4[

விசேட கலந்துரையாடல்

யாழ் மாவட்டத்தி லுள்ள அனைத்து வர்த்தக சங்கங்களின் நிர்வாகசபை உறுப்பினர்கள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரசியல்துறை யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெறும் விசேட கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (ஈ)

ஜே. ஆரின் சுயசரிதை

கொழும்பு. ஓக 31

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா தமது சுயசரிதையை எழுதிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை இந்தியாவின் பிரபல வெளியீட்டு நிறுவனமான ஹார்ப்பர்—கொலின்ஸ் வெளியிடவுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் 85 வயதான ஜெயவர்த்தனா கடந்த மாதம் கையெழுத்திட்டார்.

இதே நிறுவனம் தான் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி வெங்கடராமனின் சர்ச்சையைக் கிளப்பிய, சுயசரிதையையும் அண்மையில் வெளியிட்டது. (இ-எ)

நல்லூர் ஆலயச்சூழலில் இன்று நடக்கும் நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி இருபதாம் திருவிழாவான இன்று ஆலயச் சுற்றாடலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:

நாவலர் மணிமண்டபமுன்றிலில் தெய்வீக இசையரங்கு

மாலை 6 7 மணிவரை வாசஸ்பதி ரஜீந்திரன் இசைக்கச்சேரி மாலை 7 — 8-30 மணிவரை எஸ். பத்மலிங்கம் இசைக்கச்சேரி

நல்லை ஆதீனத்தில்

காலை 9-30 மணிக்கு சமய தீட்சை

மாலை 2 மணிக்கு சமயப் பேருரை

மாலை 3 மணிக்கு புராணப்படிப்பு

மாலை 4 மணி முதல் திருமதி. ஸ்ரீரகுராணி ராமசந்திரன் இசைக்கச்சேரி

இரவு 6 — 7மணி வரை பிரசங்க பூஷணம் - நடேசன் சிவசண்முக மூர்த்தியின் கந்தரனுபூதி இசைப் பேருரை

மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில்

மாலை 5-30 மணிக்கு சம்பூர்ணராமாயணம் தெய்வீக இசைப் பேருரை ''குருகுகம்'' என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா

தித்திக்கும் முத்தமிழ் அரங்கில்

இரவு 8-30 மணிக்கு — வடமராட்சிக் கலைஞர்களின் சிறுவர் நடனம்

'தாரம் அதிகமில்லை'' நாடகம் (க-30-111)

இன்று கைலாசவாகன திருவிழா

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் 20ஆம் திருவிழா சந்தானகோபாலர் உற்சவம் இன்று புதன் கிழமை காலை 7மணிக்கும், கைலாசவாகனத் திருவிழா மாலை 5மணிக்கும் நடை பெறும். (க-30-111)

பொன்னாலை தேர்த்திருவிழா

சுழிபுரம், ஓக 31

கடந்த திங்கட்கிழமை பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய தேர்த் திருவிழா அமைதியான சூழ்நிலையில் நடைபெற்றது. இவ்வாண்டு சுவாமி வெளிவீதியுலா வருதலும் இடம் பெற்றது. (க-28 30)

பட்டதாரி பயிற்சி திட்டம் தொடருவதற்கு தீர்மானம்

கொழும்பு, ஓக 31

ஐ.தே.க அரசினால் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங்கி தொழில் வாய்ப்பளிக்கும் திட்டத்தை தொடர்ந்து அமுல் நடத்துவது என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ்பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு ஒரு வருடபயிற்சியுடன் அரச மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 7 ஆயிரம் பட்டதாரிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். இன்னும் ஆயிரத்து 500 பேர் பயிற்சி பெறக் காத்து இருக்கின்றனர்.

நல்லூர் உற்சவகால அர்ப்பணம்

வரந்தந்து காத்திடுவாய்!

ஏறுமயில் ஏறிவரும் ஆறுமுக வேலவனே
ஏறெடுத்து பாராயோ எம்மவர்கள் படுந்துயரை
வீறுகொண்ட வேங்கை படையவரின் வெற்றிக்கு
வேலவனே வழிசமைக்க விரைந்தோடி வாராயோ
கரமிரண்டும் கூப்பி புனைத் தொழுகின்றோம்
வரம் தந்து காத்திடுவாய் வடிவேலா
நிலந் தனிலே எமவர்கள் துயர்தன்னை
நீக்கிடவே வந்திடுவாய் நல்லூரின் காவலனே!

- அரியாலையூர் ஐ. குமாரதாசன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

இல. 211, 213 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் இரண்டரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இரு கடைகளையும் பல அறைகளையும் உள்ளடக்கி வியாபார மையத்தில் அமைந்துள்ளது. தொடர்பு: டாக்டர் எஸ். சிவராமலிங்கம், இல. 457, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (32619)

வீடுகள் விற்பனைக்கு

இரண்டு வீடுகள் நாமகள் ஒழுங்கையில் விற்பனைக்கு உண்டு தரகர் தேவையில்லை. தொடர்புகொள்ளவும். ந. அருணாசலம், நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (32640)

உற்சவகால விற்பனை

இந்திய, இலங்கை நாவல்கள் தொகையாகவும், சில்லறைக்கும், சிவம் நீதிக் கதைகள், 1, 2, 3, 4, 5, 6 பாகம் புதியவை. சமய புராணப் புத்தகங்கள், இந்திய சஞ்சிகைகள் விற்று முடிப்பதற்கான மலிவு விலையில் ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். [சி-8678]

காணி விற்பனைக்கு

ஆவரங்கால் சிவன் கோவிலுக்கு அருகில் பத்துப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும், தென்னைப் பயிர்ச் செய்கைக்கும் உகந்தது. தொடர்பு: இல. 687, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32604)

ஆனந்தம் சீயாக்காய்

பேன், சொடுகு வராது பேண வேண்டிய மூலிகையுடன் சீயாக்காய் சேர்த்து சித்த மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பெற்றது ஆனந்தம் சீயாக்காய் பவுடர். கேட்டு வாங்கி பயன் பெறவும். (சி-8647)

மணிக்கூடுகள் தேவை

உதிரிப்பாகங்களுக்காக பாவித்த நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-8686)

மணமகன் தேவை

அழகும், நற்குணமும் கௌரவமான குடும்ப 29-07-1962ஆம் ஆண்டு திருவாதிரை 2ஆம் கால் 11இல் செவ்வாய் பாவக் கிரகம் கூடிய விஞ்ஞான ஆசிரியைக்கு கௌரவமான குடும்பமும் நற்குணமுமுடைய ஆசிரியர் அல்லது அரச உத்தியோகத்தர் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்: அபிராமி திருமண சேவை, துர்க்காதேவி தேவஸ்தானம், சாவகச்சேரி. (32626)

18-12-1958, பூரட்டாதி 4ஆம் பாதம், 6இல் செவ்வாய் B. A. (டிப்ளோமா) பூர்த்தி செய்த, அழகும், நற்குணமும் உள்ள கௌரவமான குடும்பத்து ஆசிரியைக்கு கௌரவமான குடும்பத்து அரச உத்தியோக மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்; அபிராமி திருமண சேவை, துர்க்காதேவி தேவஸ்தானம் பின் வீதி, சாவகச்சேரி. (32625)

மிருதங்க வகுப்பு

மிருதங்க வகுப்புகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், இல. 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (32622)

சேவல் விற்பனைக்கு

தடுப்பு ஊசி ஏற்றப்பட்ட ஒரு மாதம் வளர்ச்சி அடைந்த பிறவுண், கறுப்பு சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. மகிளாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32644)

தட்டெழுத்து வகுப்பு

தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்பு (ஆங்கிலம்-தமிழ்) மீண்டும் 1-9-94இல் ஆரம்பமாகின்றன. இடம்: கிறி வீதி, (தாளையடி ஒழுங்கை), திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. [32564]

காவேரி சீயாக்காய்

ஆறுவிதமான இயற்கைப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுவது காவேரி சீயாக்காய்ப் பவுடர். இப்போது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்கவும். (32231)

வெளிவந்துவிட்டது

பலரும் நீண்ட நாளாகத் தேடிக் கொண்டிருந்த நூல் ''கால விரதங்களும் விழாக்களும்'' புதிய பதிப்பு வெளிவந்துவிட்டது. ஆசிரியர் கோப்பாய் சிவம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (32606)

பாலர் ஆசிரியராக

விரைவில் பயிற்சி க.பொ.த. (சா/த) சனி ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் கற்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (7737)

மகாதேவா ஜோதிடம்

வியாழ மாற்றம் வெளிவந்துள்ளது. இல. 140, செல்லர் வீதி, கல்லியங்காட்டுச் சந்தைக்கு அருகில் சோதிடரைத் தினசரி சந்திக்கலாம். (32615)

தவறிவிட்டது

23-8-94 அன்று ஆ. சுகிர்தமலரின் குடும்ப அட்டை, போராளி காட், நிவாரண கார்டு மற்றும் முக்கிய ஆவணங்களுடன் பிறவுண் பாக் ஐந்து சந்திக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்; க. வாணி, இல. 169/8, அரசடி 2ஆம் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம். (32628)

27-8-94 அன்று நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையில் (அரசடி வீதி வழியாக) கல்பதிக்கப்பட்ட பவுண் காப்பு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். இல. 513 (951), கே. கே. எஸ். றோட், தட்டாதெரு, யாழ்ப்பாணம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (32630)

க. குணசேகரம் 52171127X, கு. குஞ்சரமணி 526713036X இவர்களின் அடையாள அட்டைகள், வவுனியா பாஸ் ஆகியன 28-8-94 அன்று வடலியடைப்புக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மானிப்பாய், சங்கரப்பிள்ளை வீதி, சச்சி முகாமில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் (32642)

அனெக்ஸ் தேவை

அரசாங்க ஆசிரியரின் தனியான குடியிருப்புக்கு சமையலறை, மலசலகூட வசதிகளுடன் தனிப் பாதையுடனான பகுதி வீடு, ஒன்றரை வருடங்களுக்கு திருநெல்வேலி, நல்லூர், கந்தர்மடம், கொக்குவில் பகுதிகளில் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல. 688, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32643)

"வதிவிட வேளாண்மை"

துவரை, கீரை விதை கிடைக்கிறது. நல்லூர் தொழிற்துறை மேம்பாட்டுக் கண்காட்சித் தொகுதி-மில்க்வைற் பகுதியில். மில்க்வைற் சோப் மேலுறை / மில்க்வைற் சவர்க்காரத்துள் வெற்றுப் பக்கற் 10 கொடுத்து விதைப் பக்கற் ஒன்று அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளலாம். ''மில்க்வைற்'' (சி-8965)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 22 – 06 – 1937

மறைவு: 10 – 09 – 1993

அமரர் சரவணமுத்து விசுவலிங்கம்

(பண்ணாகம் - சுழிபுரம்)

திதி: 1994 - 08 - 31

கண்ணை இமை காப்பது போல் எங்களை அரவணைத்து காத்த எங்கள் அன்புத் தெய்வமே! திடீர் என நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்த ஓராண்டு காலத்தை ஒரு யுகமாய் கழித்து விட்டோம். புன் சிரிப்பில் புதுமலராய் நிறைந்து நின்ற சோகத்தை நெஞ்சினிலே சுமந்து கொண்டு உங்கள் நினைவே வாழ்வாக உயிரையே சுமக்கின்றோம் எஞ்சிய எம் காலத்தை குலதெய்வம் போல் இருந்து எங்களைக் காக்க வேண்டும் என்று உங்களை வரம் கேட்டு நிற்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் குலதெய்வமாகிய வடக்கம்பரை அம்பாளையும் விசவத்தனை முருகனையும் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[32618]

நாளை (01 - 09 - 1994) வியாழக்கிழமை
காலை முதல் மாலை வரை
நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்

சோதிட மாநாடு

அனைவரையும் அழைக்கின்றோம்

(32638) லிங்கம் கூல்பார், யாழ்ப்பாணம்

SPECIAL ENGLISH

- A/L பரீட்சை எழுதிய மாணவர்கட்கும்
- பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கட்கும் பயனுடையது.
- சகல மொழித்திறன்களையும் கொண்ட கற்கைநெறி.

ஆரம்பம்: 01 - 09 - 1994
வியாழக்கிழமை மு.ப. 10 மணி

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

மேலதிக விவரங்கட்கு:
நிர்வாகியுடன் தொடர்பு கொள்க,

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்,
(சி-8963)

கலந்துரையாடல்

பேராதனை (94) G A Q மாணவர்களுக்கான கலந்துரையாடல் 03-09-94 சனி பகல் 12மணிக்கு கல்லூரியில் நடைபெறும். சகல மாணவர்களையும் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புதிய உயர் கல்லூரி
யாழ்ப்பாணம்

மாணவர்கள்,
பேராதனை (94) G. A Q.

[32639]

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி அருந்தவராணி விஜயகுமார்

(பட்டதாரி ஆசிரியை, கிளிநொச்சி மகாவித்தியாலயம்)

தோற்றம்: 12 – 04 – 1957

மறைவு: 31 – 08 – 1990

பாசத்தின் உறைவிடமாய், பெற்றோருக்கு தலைமகளாய், இரு கண்மணிகளுக்கும் தாயாராய் அன்புக் கணவனை விட்டுப்பிரிய மனமில்லாமல் ஆறு மாதத்தில் தான்சென்ற பாதையில் அழைத்துச் சென்ற கண்மணியே! உம் நினைவு இறைவனோடு நீர் இணைந்திட இறைவனையே இறைஞ்சுகின்றோம்.

உம் பிரிவால் என்றும் துயருறும்;
பெற்றோர்,
மழலைமாறாத கண்மணிகள்,
சகோதரர்கள், அன்புப்பேர்த்தி,
சித்திமார், மாமன்மார்.

(32600)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்: 26 – 12 – 1931

அம்பாள் அடியில்: 01 – 08 – 1994

நீராவியடியை பிறப்பிடமாகக் கொண்ட

அமரர் குருநாதர் சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசன திணைக்களம்)

ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரோடி
வாழையடி வாழையாக நாம் வாழ நினைக்கையிலே
பொன்னான உங்கள் மேனியிலே காலன்
அறியாத நோயாகி கவர்ந்ததேனோ
கண்ணின் கருமணியாய் காத்து வந்த பிள்ளைகளை
விட்டு விட்டே கார்கால மேகமென -
மறைந்ததேனோ
தங்கி நின்ற ஆலமரம் சாய்ந்து விடில்
பறவைகள் நாம் நிழல் தேடி எங்கு செல்வோம்
வாழ்வதிலே தக்கவழி காட்டியது போல என்றும்
நல்ல வழி காட்டி நின்று சாந்தியையே பெறுக.

எமது அன்புத் தந்தையின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எங்கள் துயரில் பங்குபற்றி பல வழிகளில் ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவருக்கும் எங்கள் இதயம் நெகிழ்ந்த நன்றிகள்.

— குடும்பத்தினர்.

85/11 ஆனந்தன் வடலி வீதி,
[illegible]
யாழ்ப்பாணம்.

(32641)

முன்னாள் அமைச்சர்களின்

ஆடம்பர சொகுசு 5 கார்கள் ஏலத்தில் விடப்படும்!

இனி டீசல் வாகனங்களே முக்கியத்துவம்

கொழும்பு, ஓக. 31

கடந்த அரசின் அமைச்சர்கள் பாவித்த மிகப் பெறுமதி மிக்க ஆடம்பரக் கார்களில் மேலதிகமாக இருப்பவற்றை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய பிரதமர் சந்திரிகா முடிவு செய்துள்ளதாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரானா தெரிவித்தார்.

ஆளும் கட்சி அமைச்சர்கள் பென்ஸ், பீ. எம். டபிள்யூ போன்ற ஆடம்பர கார்களைப் பாவிப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கல்வி, உயர்கல்வி அமைச்சிடம் உள்ள 50 வாகனங்களில் நான்கு சாதாரண வாகனங்கள் கல்வி அமைச்சுக்கு வழங்கப்படும் என்றும்—

ஏனையவை ஏலத்தில் விற்கப்படும் என்றும்— அவர் கூறினார்.

இதற்கிடையில்—

அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றுக்குச் சொந்தமான பெற்றோலில் இயங்கும் அனைத்து வாகனங்களும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

உள்நாட்டு அலுவல்கள் கூட்டுறவு, மாகாண சபை அமைச்சர் அமரசிறி தொடங்கொட இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வாகனங்களை ஏலத்தில் விற்பதற்கு அரசின் அனுமதி கிடைத்துள்ளது. இதற்குப் பதிலாக எதிர்காலத்தில் டீசலில் இயங்கும் வாகனங்களே பயன்படுத்தப்படும். இதன் மூலம் பெருந்தொகைப் பணத்தை மீதப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ ஐ—6 -3)

MILKWHITE
V.M.K
SOAP
JAFFNA
மில்க்வைற்

விலை குறைப்பும்,
அன்பளிப்பும்
இனியதோர் செய்தி

'மில்க்வைற் நீல சவர்க்காரம்'

கட்டி ஒன்று ரூபா 6/-
சிறிய (பேபி)
சவர்க்காரம் ரூபா 3/-

★ 25 மில்க்வைற் (நீல) சவர்க்கார மேலுறைக்கு ஒரு அப்பிளாசக் கோப்பி அன்பளிப்பு

[சி-8964] "மில்க்வைற்"

பல மாணவர்களின்
வேண்டுகோளுக்கிணங்க

COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

4 MONTHS

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

வார இறுதி வகுப்புகள்: 03 — 09 — 1994 10-30

வாரநாள் வகுப்புகள்: 06 — 09 — 1994 10-30

Lectures By:
S. P. Sivapathasundaram
M I D P.M. (London)

★ கட்டணம் தவணை முறையில் மாதம் ரூபா 400/- மட்டுமே
★ Basic கற்கும் மாணவர்களுக்கு Lotus, Word Star பாடநெறிகளுக்கான கட்டணங்களில் சலுகை
★ அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ Basic English, Short-Hand & Typing புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.
[சி-8966]

இலங்கை இசைப் பேரவையும் யாழ். மாவட்ட இளைஞர் பேரவையும்

இணைந்து வழங்கும்

'தெய்வீக இசை கானம்'

காலம்: 31-08-94 புதன் (இன்று) பிற்பகல் 3-00

இடம்: நல்லை ஆதீனம்

தலைவர்: திரு. ந. தவபாலன்
[தலைவர் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை)

ஆசியுரை, நல்லை ஆதீன முதல்வர்

பிரதம விருந்தினர்:
யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம்

இசை கானம் வழங்குபவர்:
வேலணைக் கல்விக் கோட்ட சங்கீத ஆசிரிய ஆலோசகர், சங்கீதரத்தினம் திருமதி ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-விழாக் குழுவினர்.

வாழ்த்துபவர்கள்:
அண்ணா தொழிலகத்தினர்
இணுவில் (சி/9001)

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

பழையவரின் வழி தானா?

வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்துவது, பொருளாதாரத் தடையை நீக்குவது என்பன சம்பந்தமாக சந்திரிகா அரசாங்கம் இன்று புதன்கிழமை ஓர் உத்தியோகபூர்வ முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்விடயங்கள் விரிவாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தனது அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று சந்திரிகா தேர்தல் காலத்திலேயே கூறிவந்தார்.

ஆகையால், அமைச்சர்கள் மட்டத்தில் இவை சம்பந்தமாக கருத்து முரண்பாடுகள் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியவில்லை.

எனவே, யுத்த நிறுத்தம், பொருளாதாரத் தடைநீக்கம் ஆகியவற்றுக்கு ஜனாதிபதி தரப்பில் இருந்துவரும் முட்டுக்கட்டை, படை அதிகாரிகள் தரப்பில் இருந்துவரக் கூடிய ஆட்சேபங்கள் ஆகியவற்றை எதிர்கொள்வது அல்லது சமாளிப்பது என்பது குறித்தே இன்றைய அமைச்சரவையில் ஆலோசனை நடத்தப்படும் என்று நம்பலாம்.

யுத்தநிறுத்தம் பொருளாதாரத் தடை என்பவற்றுக்கு ஜனாதிபதி எவ்வாறு முட்டுக்கட்டை போட எத்தனிக்கிறார் என்பது குறித்து நேற்று இப்பத்தியில் பார்த்தோம்;

இது விடயத்தில் அவர் விடாப்பிடியாக நின்றால், முட்டுக்கட்டை போடுவதில் இறுக்கமாக நின்றால், தெற்கின் அரசியலில் புதிய 'பூகம்பம்' ஒன்று வெடிக்கும்; அங்குள்ள அரசியல் பரிமாணத்தில் மாற்றம் உண்டாகும். சந்திரிகாவுக்கும் விஜேதுங்கவுக்கும் இடையேயான 'கெடுபிடி யுத்தம்' உச்சக்கட்டத்தை அடையும்.

திறைசேரியில் நடந்த பகற் கொள்ளைகள், பாதுகாப்பு அமைச்சில் நடந்த ஊழல்கள் தரகு உழைப்புகள் மற்றும் அமைச்சுகளில் இடம்பெற்ற பண மோசடிகள், ஊழல்கள் என்பனவற்றை ஜனாதிபதிக்கு எதிரான துரும்புச் சீட்டாக சந்திரிகா பயன்படுத்த வேண்டிய சூழ்நிலையும் வரும்.

மேலும் ஜனாதிபதி அலுவலகத்துக்குரிய நிதிக்கொடுப்பனவுகளைத் தடுப்பதன் மூலமும் சந்திரிகா பதிலடி கொடுக்கமுடியும். இவை ஒரு புறம் இருக்க—

யுத்த நிறுத்தம், பொருளாதாரத்தடை நீக்கம் சம்பந்தமாக படை உயரதிகாரிகளுடனும் சந்திரிகா ஆலோசனை நடத்தவிருப்பதும் ஒரு முக்கிய நிகழ்வாக அமையப் போகிறது.

கடந்த நான்கு வருட காலத்தையும் பின்னோக்கிப் பார்த்தால், யுத்தத்தை தொடர்வதனையே படை உயர் அதிகாரிகள் தமது நிலைப்பாடாக வரித்துள்ளதைப் பார்க்கலாம். பெரும் தோல்விகளின் மத்தியிலும், விடுதலைப் புலிகளைத் தம்மால் வெல்ல இயலும் என்ற நம்பிக்கையை அரச உயர் பீடத்துக்கு ஊட்டி, இராணுவத் தீர்வு என்ற அவர்களின் கொள்கைக்கு உரமூட்டியவர்கள் இராணுவ அதிகாரிகள்.

இதன் பின்னரும் அவர்களிடம் கருத்து அறிந்து முடிவு எடுக்க வேண்டும் என்ற வழியை சந்திரிகா கைக்கொள்வது உசிதமான மார்க்கமாகத் தெரியவில்லை. தாம் ஒரு முடிவை எடுத்துக் கொண்டு, அதனை நடைமுறைப்படுத்த உதவுமாறு படை அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வதே பொருத்தமானதாகும்.

படை அதிகாரிகளின் எதிர்ப்பைச் சம்பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக, இந்த விவகாரத்தில் அவர்களையும் சமாளித்துச் செல்ல சந்திரிகா நினைத்திருக்கலாம். ஆனால் இனி மேலும் ஏனைய முக்கிய விடயங்களிலும் படையினர் இதனையே எதிர்பார்ப்பர். அது படையினர் அரசு மீது அழுத்தம் போடும் நிலைக்கும், செல்வாக்குச் செலுத்தும் நிலைக்கும் இட்டுச் செல்லும்.

அத்தகைய ஒரு நிலையில் ஐ. தே. க. அரசுக்கும் சந்திரிகா அரசுக்கும் இடையே வித்தியாசம் இல்லாமல் போய்விடுமே!

புதிய நிர்வாக அலகுதிட்டம் மூலம் பிரச்சினை பூரணமாகத் தீராது!

தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, ஓ. 31

புதிய நிர்வாக அலகுகளை உருவாக்குவதன் மூலம் வடக்கு— கிழக்கு யுத்தத்துக்கு தீர்வு காணப்படும் என்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் யோசனை பிரச்சினையை பூரணமாகத் தீர்க்காது.

திரு. தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"எனினும், இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் சந்திரிகா தீவிரமாக இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய சிந்தனைகளுடனான அணுகுமுறை ஏதாவது ஒருவித தீர்வைக் கொண்டு வரலாம். எது திருப்பியும் தாக்கக் கூடும்; யாருக்குத் தெரியும்?"— என்றும் அவர் சொன்னார்.

"நீண்டு கொண்டு போகும் இந்த யுத்தத்துக்கு விடுதலைப் புலிகளுடன் பேசி எடுக்கப்படும் எந்த தீர்வுக்கும், எதுவித தயக்கமும் இன்றி நாம் சந்திரிகாவுக்கு ஆதரவு வழங்குவோம்"— என்றும் அவர் கூறினார்.

பேச்சுகளில் கலந்து கொள்வதற்காக தமிழ் ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்கிறீர்களா என்ற கேள்விக்கு—

அது குறித்துத் தாம் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்றார் திரு. தொண்டமான்.

(இ-எ)

இ.தொ.காவிலிருந்து

வேலம்மாளுக்கு சீட்டுக் கிழிப்பு

கொழும்பு, ஓ. 31

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து திருமதி வேலம்மாள் செல்லச்சாமி கடந்தவாரம் வெளியேற்றப்பட்டார் அதனைத் தொடர்ந்து அவர் மேல்மாகாண சபை உறுப்பினர் பதவியையும் இழந்தார் என்று அறிவிக்கப்படுகிறது.

அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு திரு. செ. ஜெகதீஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்,

திருமதி வேலம்மாளின் இரண்டாவது கணவர் முன்னாள் ராஜாங்க அமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமி ஆவார்.

எம். எஸ். செல்லச்சாமி ஏற்கனவே இ.தொ.காவில் இருந்து வெளியேற்றப்பட்டுவிட்டார் கடந்த தேர்தலில் இவர் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார்.

வேலம்மாளின் இடத்துக்கு மாகாண சபை உறுப்பினராக தற்போது நியமிக்கப்பட்ட திரு செ. ஜகதீஸ்வரன் திருமதி வேலம்மாளின் முதல் கணவருக்கு பிறந்த மகன் ஆவார்.

(இ-எ)

கூரேயின் பெயரை நீக்க விஜேசேகரா காரணம்

கொழும்பு, ஓ. 31

ஐ.தே.க பொதுச் செயலாளர் காமினி விஜேசேகரா விடுத்த அச்சுறுத்தல் காரணமாகவே முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரேயின் பெயர் தேசியப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதாக பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் பிரதமர் ரணிலின் வற்புறுத்தலின் பேரில் ஜனாதிபதி கூரேயின் பெயரை தேசியப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள முன் வந்த போது, ஐ.தே க, பொதுச் செயலாளர் காமினி விஜேசேகரா தலையிட்டு—

கூரே எம்.பியாக்கப் பட்டால் தாம் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து வெளியேறப் போவதாக தெரிவித்தாராம்.

இதற்கு ஜனாதிபதி விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று.

மாவட்டம் தோறும்

லஞ்ச ஆணையாளர் திணைக்கள கிளை

கொழும்பு, ஓ .31

லஞ்ச ஆணையாளர் திணைக்களத்தின் கிளைக் காரியாலயங்கள் மாவட்ட மட்டங்களில் திறக்கப்பட இருக்கின்றன. லஞ்ச ஊழல், விரயம் ஆகியவற்றை ஒழித்துக் கட்டுவதென்ற அரசாங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இவை திறக்கப்படும்.

உள்நாட்டு விவகார மாகாணசபை கூட்டுறவுத் துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட காலி நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரசாங்க ஊழியர்களின கூட்டம் ஒன்றில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கூட்டுறவுத்துறையில் லஞ்சம் அல்லது ஊழலில் சம்பந்தப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவராவது கடந்த காலத்தில் சிறைத் தண்டனைக்கு உள்ளாகவில்லை என்பது வருந்தத்தக்க விடயமாகும் என்றும் அமைச்சர் சொன்னார்.

இத்தகைய நபர்களுக்கு எதிராக இனிமேல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-4)

எதிர்க்கட்சித் தலைவர் பதவி:

காமினிக்கு ஆதரவு தேடிய ஹேமா

கொழும்பு ஓக 31

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவில் ஹேமா பிரேமதாஸா, காமினி திஸநாயக்காவுக்காக ஆதரவு திரட்டினார் என்று தெரிவிக்கப்படுகின்றது

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா பதவியில் இருந்த போது அவருக்கு எதிராக அரசியல் குற்றச் சாட்டுப் பிரேரணையை கொண்டு வந்த முக்கிய சூத்திரதாரிகளில் ஒருவரான காமினிக்கு ஹேமா ஆதரவளித்தது ஐ. தே. க வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

நடந்து முடிந்த தேர்தலில் முன்னாள் பிரதமர் ரணிலுக்கு முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே ஆதரவளித்ததே ஹேமாவின் இம் மாற்றத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிதாகத் தெரிவான ஐ. தே. க எம்பிக்களின் பட்டியலை வாங்கிக் கொண்ட ஹேமா அவர்களை தனிப்பட்ட முறையில் அழைத்து காமினிக்கு வாக்களிக்கும்படி கேட்டுக் கொண்டார்;

நிலைமையை அறிந்து கொள்ள

தமிழ்ப் பகுதி ஆயர்களை சந்திக்க பிரதமர் விருப்பம்

வடக்கு - கிழக்கு நிலைமை குறித்து அறிந்து கொள்வதற்காக அங்குள்ள கத்தோலிக்க ஆயர்களைச் சந்திக்க பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மேற்றிராணியார் மூலமாக பிரதமர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம், மட்டக்களப்பு திருகோணமலை ஆயர் அதி. வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மற்றும் மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப் ஆகியோர் ஆயர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பு சென்று தற்சமயம் அங்கு தங்கியுள்ளனராகவும் —

இவர்கள் [illegible]க்குத் திரும்பு முன்னர் பிரதமரைச் சந்திப்[illegible] தெரிவிக்கப்பட்டது. (ஓ 3)

ஐ. தே. க ஆதரவாளர்கள் தாக்கப்படுகின்றனராம்!

கொழும்பு, ஓ. 31

ஐ. தே. க ஆதரவாளர்கள் மற்றும் தொண்டர்கள் தாக்கப்படுவதை புதிய அரசு தடுக்கத் தவறிவிட்டது என்றும்—

தேர்தலுக்குப்பின் நடந்த வன்செயல்களில் ஐ. தே. க ஆதரவாளர்கள் ஐவர் பலியாகியுள்ளனர் என்றும் ஐ. தே. கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒவ்வொரு நாளும் தமது ஆதரவாளர்கள் பலர் கைகால்கள் கட்டப்பட்டும், கண்கள் மூடிக்கட்டப்பட்ட நிலையிலும் வேறு இடங்களுக்கு கடத்தப்படுவதாகவும்—

இதுவரை இவ்வாறான இருநூறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும்—

ஐ. தே. க பொதுச் செயலாளர் காமினி விஜயசேகர செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஐ தே க. ஆதரவாளர்கள் மீது அரச ஆதரவாளர்கள் நடத்தும் தாக்குதல்களை தடுத்து நிறுத்துமாறும் ஐ. தே. கட்சி புதிய அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

அமைச்சர்களுக்கு வந்த

8 பென்ஸ் கார்கள் தடுத்துவைப்பு!

முன்னைய அரசாங்கம் கொள்வனவு செய்த பல ஆடம்பர வாகனங்கள் கொழும்பு துறைமுகத்தில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் நேற்று கொழும்பு துறை முகத்துக்கு விஜயம் செய்து இது குறித்து விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டார்.

முன்னாள் அமைச்சர்களுக்காக அரசாங்கத்தின் வழங்கல் திணைக்களம் கொள்வனவு செய்த எட்டு மேர்ஸிடிஸ் பென்ஸ் கார்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கப்பல் மூலம் வந்து சேர்ந்தன.

பிரதேச சபை தலைவர்களும் இதே வகையான 18 வாகனங்களை தருவித்திருந்தனர்.

(உ-3)

தேர்தல் காலத்தில் இடம்பெற்ற

அசிட் வீச்சுச் சம்பவம்: ஏ.எஸ்.பி. தலைமறைவானார்

கொழும்பு, ஓக 31

தேர்தல் காலத்தின் போது ஜா-எல பகுதியில் இடம் பெற்ற அஸிட் திரவ வீச்சுச் சம்பவம் தொடர்பாக தேடப்படும் உதவிப் பொலிஸ் அதிபர் ஜயந்த சில்வா தலைமறைவாகி விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்,

தேர்தலின் பின்னர் அவர் கடமைக்குத் திரும்பவில்லை என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தலின் போது முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவின் பாதுகாப்பு அதிகாரியாக இவர் செயல்பட்டார்

இதேவேளை —

இச் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த முன்னாள் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா கடந்த வெள்ளிக் கிழமை பேலியாகொட பொலிஸ் அதிபர் எச். ஜீ. விக்கிரமசிங்கவிடம் சரணடைந்தார். பின்னர் அவர் நீர்கொழும்பு மாவட்ட நீதிபதி திருமதி அபயவர்தனா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

50 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்ட அவரை இன்று புதன் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நீதிபதி உத்தரவிட்டார். இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்ட மூவர் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(உ-ஏ-6)

ஆலயங்களில்

சாவகச்சேரி அமிர்த பாஷினி சமேத சந்திரசேகர வாரிவன நாத ஈஸ்வர தேவஸ்தானத்தின் "இலட்சார்ச்சனைப் பெருவிழா" இன்று புதன்கிழமை தொடக்கம் பத்து நாட்கள் நடைபெறும்.

இலட்சார்ச்சனைக் காலத்தில் "பெரிய புராணதொடர் விரிவுரையை" 'வாகீச கலாநிதி' கனகசபாபதி-நாகேஸ்வரன் நிகழ்த்துவார்.

(உ-31)

ஐ.தே.கவின் புதிய எம்.பி. இராஜினாமா!

கொழும்பு, ஓ 31

சப்ரகமுவா மாகாண முதலமைச்சர் ஜயதிலக பொடிநிலமே தாம் கேகாலை மாவட்ட எம்.பி பதவியை ராஜினாமாச் செய்யப் போவதாக ஐ.தே க. பொதுச் செயலாளர் காமினி விஜேசேகராவுக்கு அறிவித்துள்ளார்.

தொடர்ந்து முதலமைச்சராகச் செயற்பட அவர் விரும்புவதாகக் கூறப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் [illegible]ராக கேகாலை மாவட்டத்தில் போட்டியிட்டு [illegible]னார்.

(உ-எ 6)

வடபகுதிக்கான

தபால் உடைக்கப்படுவதை தடுக்க உடன் நடவடிக்கை

புதிய அமைச்சர் உறுதி மொழி

பாதுகாப்பு காரணங்களைக் காட்டி வடபகுதிக்கான தபால்கள் உடைக்கப்படுவதை தடுத்து நிறுத்தவும் —

திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் கப்பல் மூலம் வாரத்துக்கு இருதடவைகள் தபால் பொதிகளை எடுத்துவரும் சேவையை நடத்தவும் —

தேவையான நடவடிக்கை உடன் எடுப்பதாக புதிதாகப் பதவியேற்றுள்ள தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீரா உறுதி கூறியிருக்கிறார்.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் புதிய அமைச்சரைச் சந்தித்து —

தபால்கள் உடைக்கப்படுவதாலும், தாமதமாவதாலும் வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை அவருக்கு எடுத்துக் கூறியதாகக் கூறப்படுகிறது.

அப்போதே மேற்படி உறுதிமொழியை அமைச்சர் வழங்கினாராம்.

(உ-4)

பல்கலை ஊழியர் பிரச்சினை இணக்கம் காணப்பட்டது

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் இடையில் இணக்கமான நிலை ஏற்பட்டதை அடுத்து—

கடந்த சில நாட்களாகத் தாம் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தத்தைக் கைவிடுவது என்று ஊழியர் சங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரியவந்தது.

தொழில் நுட்பவியலாளர் நியமனம் தொடர்பாக எழுந்த பிணக்கே வேலை நிறுத்தம் வரை சென்றதாகக் கூறப்பட்டது.

சம்பந்தப்பட்ட நியமனம் தொடர்பான எழுத்துப் பரீட்சையில் தோற்றிய 27 விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறு புள்ளிவிவரங்களை பகிரங்கப்படுத்தவும்—

சம்பந்தப்பட்ட நேர்முகத் தேர்வை பொது நிர்வாக சுற்று நிருபம் 15 / 90 இன்படி நடத்தவும் இணக்கம் காணப்பட்டதாக ஊழியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டதால் இன்று முதல் வழமையான கடமைகளுக்கு சமுகமளிக்குமாறு ஊழியர் சங்கம் தனது அங்கத்தவர்களைக் கேட்டுள்ளது.

[உ-6-4]

பிரேமா கொலை விசாரணை:

பிரபல நிபுணர்கள் சாட்சியமளிப்பர்!

ஹேமா அறிவிப்பு

கொழும்பு, ஓ. 31

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலைச் சம்பவம் பற்றி விசாரிக்கும் ஆணைக்குழுவின் முன்னால் பிரபல தொழில்சார் நிபுணர்கள் சாட்சியமளிப்பர் என்று ஹேமா பிரேமதாஸா அறிவித்துள்ளார்.

அந்நிபுணர்கள் யார் என்பதை வெளியிட அவர் மறுத்து விட்டார்,

திருமதி சந்திரிகா குமாரணதுங்கா பிரதமராக பதவி ஏற்ற முதல் நாளே பிரேமதாஸா படுகொலை பற்றி விசாரிக்க ஆணைக்குழு நியமிக்கப்படும் என்ற அறிவித்தல் தமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது என்றும் ஹேமா தெரிவித்தார்.

பொலீஸ் விசாரணை நடைபெறுவதாகக் கூறி முன்னாள் ஐ. தே. க. அரசு தமது கோரிக்கையை ஏற்கமறுத்தது என்றும் அவர் சொன்னார்.

முன்னாள் அமைச்சரான

மேர்வின் கூரேயும் மகனும் கைதாகி பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஓ. 31

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் களுத்துறை மாவட்ட எம்பியான றெஜினால்ட் கூரேயை தேர்தல் வேட்பாளர் நியமனத்தன்று தாக்கிய சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் மேர்வின் கூரேயும் அவரது புதல்வர் சஜித் கூரேயும் களுத்துறை பொலீஸாரால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

சஜித் கூரே மேல்மாகாண சபை உறுப்பினர் ஆவார்.

இருவரும் பின்னர் பொலீஸாரினால் சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

(உஎ)

சில அதிகாரிகளின் தவறான தகவல்களால்

கொழும்பில் எம் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை

வங்கியாளர் சங்கக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஓ. 31

இம்மாவட்டத்தை விட்டு வெளியேறும் அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் தமது சொந்த நன்மைகளை நிறைவேற்றுவதற்காக கொழும்பில் சிங்கள அதிகாரிகளிடம் இங்குள்ள நிலைமை பற்றி பிழையான தகவல்களைக் கொடுக்கிறார்கள். இதனால் யாழ் மாவட்டத்திலுள்ள வங்கிகள், அரச திணைக்களங்களின் தலைவர்கள் கொழும்பில் எமது மாவட்ட மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்து கொள்ள முடியாமல் இருக்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளராக இருந்து ஓய்வு பெற்று செல்லும் திரு. க. கணேசமூர்த்தி.

யாழ்ப்பாணம் வங்கியாளர் சங்கத்தின் பரிசளிப்பு விழாவும் இதன் தலைவர் திரு. க. கணேசமூர்த்தியின் பிரியாவிடை வைபவமும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரிப்பட்டதாரிப் பிரிவின் பேராயர் குலேந்திரன் ஞாபகார்த்த மண்டபத்தில் யாழ். வங்கியாளர் சங்கத்தின் உபதலைவரும் - மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளருமான திரு. ஆர். அருளானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திரு. க. கணேசமூர்த்தி தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

ஒரு நாட்டில் வைத்திய சேவை எவ்வளவு முக்கியமோ அதே போன்று ஒரு நாட்டின் இருதயம் போன்றது வங்கிச் சேவை. இங்கு வளர்ந்து வரும் சமுகத்தினருக்கு வங்கியைப் பற்றிய போதிய அறிவு இல்லாததினால் கடந்த காலத்தில் வெளிநாடுகளில் இருந்து கஷ்டப்பட்டு உழைத்து கடிதங்களில் வைத்து அனுப்பிய பண நோட்டுகள் எவ்வளவோ தொலைந்து விட்டன.

வங்கியைப் பற்றி ஒவ்வொரு பாடசாலைகளிலும் விளக்கப்படுத்த வேண்டும். வரும் காலத்தில் வங்கிச்சேவையைப் பற்றி அறிந்து இராத எவரும் சீராக வாழ முடியாத நிலை உருவாகும். வாடிக்கையாளர்கள் தங்களின் சங்கங்கள் மூலமாக வங்கிச் சேவையிலுள்ள குறைகளை வங்கி முகாமையாளருக்கு எழுத வேண்டும். அப்போது தான் சிறந்த வங்கிச் சேவையை ஆற்ற முடியும்.

அத்தியாவசியப் பொருள்களுக்கு பிச்சை கேட்காமல் இந்த நாட்டை முன்னேற்றுவதற்கு வங்கிச் சேவையில் எல்லோரும் ஒன்றிணைந்து திட்டம் வகுக்க வேண்டும்.

முனைக்கு முனை இருந்து திட்டம் வகுத்தால் முன்னேற முடியாது! ஒன்று சேர்ந்து திட்டம் வகுக்க வேண்டும். சீரழிந்த எமது பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வருங்கால சந்ததியினர் சுபீட்சமான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் யாழ். வங்கியாளர் சங்கச் செயலாளர் திரு. ஆர். வெங்கடராமன், பொருளாளர் திரு ந. சிவபாலகணேசன், உப செயலாளர் திரு க. கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் உரையாற்றினர்.

வங்கியாளர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பரிசில்கள் வழங்கல், ஓய்வு பெற்றுச் செல்லும் மேற்படி சங்க தலைவர் கௌரவிப்பும் இடம்பெற்றன. இறுதியில் யாழ். வங்கியாளர் சங்க நிர்வாக சபை உறுப்பினர் திரு. து. ரகு நன்றியுரை ஆற்றினார்.

(ஓ-4)

யாழ்ப்பாணம்
நல்லூர் இளைஞர் நூலகம்.

மரண அறிவித்தல்கள்

சின்னத்துரை கந்தசாமி ஐயா

(உரும்பராய்)

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வாழ்விடமாகவும் கொண்ட சிவத்திரு சின்னத்துரை - கந்தசாமி ஐயா உரும்பராய் மேற்கில் உள்ள தமது இல்லத்தில் நேற்றுக் காலமானார்.

இவர் சின்னத்துரை - சின்னம்மா தம்பதியின் புதல்வரும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், திருமதி தமிசம்மா செல்லத்துரையின் இனிய சகோதரரும், அருந்தவராசா, அருந்ததி (ஜேர்மனி), இருபாசக்தி, சிவானந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கண்மணிதேவி, தியாகேஸ்வரன் (ஜேர்மனி), ஈஸ்வரநாதன் (அதிபர், சைவத் தமிழ் வித்தியாலயம், உரும்பராய்), வசந்தி (கனடா) ஆகியோரின் நன் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் மரணச் சடங்கு உரும்பராய் மேற்கில் உள்ள இல்லத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:-
அ. ஈஸ்வரநாதன்
(மருமகன்)

உரும்பராய் மேற்கு,
உரும்பராய்.

(32655)

முத்தையா கந்தையா

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முத்தையா [மீசை]கந்தையா அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் நாகம்மா அவர்களின் அன்புக்கணவரும், கனமுத்து [திருமேனி], பத்மாவதி அவர்களின் பாசமிகு தந்தையாரும், தர்மலிங்கம், காலஞ்சென்ற சிந்தி விநாயகன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற நாகம்மா, சுந்தரம் ஆகியோரின் சகோதரரும், ஜெபகுமார், பிறேமலதா, கீதலதா, மத்தியூஸ் கெனடி, விஜயலதா, சுதயலதா, பொற்செல்வி, தயாநிதி, கமலமணி, ஞானதாசன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 31-8-94 புதன்கிழமை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மை. மத்தியூஸ் கெனடி
[பேரன்]

இல. 42, சப்பல் வீதி,
4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்,

[32656]

திருமதி செல்வமணி சந்திரபாலன்

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி செல்வமணி சந்திரபாலன் புங்குடுதீவில் 26-8-94 அன்று காலமானார்.

இவர் திரு. திருமதி இராசதுரை செல்லம்மாவின் அருமைமகளும், வீ. சந்திரபாலனின் அன்புமனைவியும், கீர்த்திகா, ஜானகி, அனுசா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வீரகத்தி - தங்கம்மாவின் அருமை மருமகளும், உருத்திரமூர்த்தி, ஏரம்பமூர்த்தி, தவராசமூர்த்தி, சிவானந்தமூர்த்தி, கேதீஸ்வரி, சந்தனகுமாரி, உதயராணி, ஆகியோரின் அருமைச் சகோதரியும், சத்தியபாமா, மல்லிகா ஆகியோரின் மைத்துனியும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
க. இராசதுரை
(தகப்பன்)

29 மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(32645)

இராமலிங்கம் ஆறுமுகம்

அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கைச் சேர்ந்த இராமலிங்கம் ஆறுமுகம் அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (31-08 94) நடைபெறுமென நேற்றைய உதயன் பத்திரிகை மூலமாக அறிவிக்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணத்தினால் இறுதிக் கிரியை பிற்போடப்பட்டுள்ளது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சி. கந்தையா
(மருமகன்)

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி.

(32654)

திருமதி கந்தையா நாகலட்சுமி

(மண்டைதீவு)

மண்டைதீவு 2 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், சாவகச்சேரி நுணாவில் கிழக்கு சங்கம் லேனை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி கந்தையா நாகலட்சுமி 30-8 94 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிருஸ்ணர் - செல்லமுத்து தம்பதியின் அன்பு மகளும், வைகுந்தராஜா (புகையிலை வியாபாரம், வவுனியா), வைபோகராஜா (வைலஜா ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி), சச்சிதானந்த சிவலட்சுமி (ராணி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தையல்நாயகி, சகுந்தலாதேவி, பேரின்பநாயகம் (குணம் - மருதம் போசனசாலை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தனஞ்செயன், துரைசிங்கம், மகாதேவா, அணிகலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஜனிகாந், சசிகாந், வைஜா, இந்துஜா, சஜிதா, உபேந்திரன், உஷாங்கன், சரிதா, தனுஜா, சரண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (31-08-1994) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூவுடல் பிற்பகல் 2 மணியளவில் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்,
க. வைகுந்தராசா
(மகன்)

நுணாவில் கிழக்கு,
சங்கம் லேன்,
சாவகச்சேரி.

(31649)

தேர்தல் கால பாரபட்சம் குறித்து

40 பொலீஸ் அதிகாரிகள் மீது

கடும் ஒழுங்கு நடவடிக்கை

தேர்தல் காலத்தில் பாரபட்சமாக நடந்து கொண்டதாக குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படின் பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஒருவர் உட்பட 40க்கும் அதிகமான பொலீஸ் அதிகாரிகள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலீஸ் தலைமைக் காரியாலய வட்டாரங்கள் தெரிவித்தன.

குற்றங்களின் பாரதூரத்தை பொறுத்து, இடம்மாற்றம் முதல் வேலையில் இருந்து நீக்குவது வரையான தண்டனைகள் இப்பொலீஸாருக்கு வழங்கப்படும் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேர்தலின் போது நடுநிலை வகிக்கத் தவறியதாக சுமார் 40 பொலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடுகள் பொலீஸ் தலைமைக் காரியாலயத்துக்குக் கிடைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

ரூ. 10 கோடியை ஏப்பம் விட்ட ஐ.தே.கவின் முக்கிய அமைச்சர்

கொழும்பு, ஓக. 31

முன்னைய ஐ.தே.க அரசில் பணிபுரிந்த முக்கிய அமைச்சர் ஒருவர் தென் கொரியாவில் இருந்து இலங்கைக்கு உதவியாகக் கிடைத்த சுமார் 10 கோடி ரூபாவை (19 லட்சத்து 90 ஆயிரம் அமெரிக்க டொலரை) தமது சொந்த அலுவல்களுக்கு பயன்படுத்திய சம்பவம் பற்றிய விவரங்கள் புதிய அரசுக்கு கிடைத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பதினொரு ஆண்டுகளாக இப்பணம் சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சரால் செலவு செய்யப்பட்டு வந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இம் மோசடியைச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சருக்கு வெளியுறவு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் ஒத்தாசையாக செயல்பட்டு வந்தார் என்று அரசுக்கு எழுத்து மூலமான தகவல் கிடைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது

இந்த அதிகாரி, அரச நிதிப் பிரமாணங்களை மீறி அந்த அரசியல்வாதியின் மோசடிக்கு உதவும் விதத்தில் செயல்பட்டு வந்தாராம்.

தென் கொரியாவில் இருந்து கிடைத்த இந்த உதவித் தொகை திறைசேரிக்கும் வெளிநாட்டு வளத்திணைக்களத்துக்கும் தெரியாது மூடி மறைக்கப்பட்டுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்பணத்தைச் செலவு செய்தது பற்றிய விவரங்களை வைத்திருப்பதற்கு சிரேஷ்ட கணக்காய்வு அதிகாரி ஒருவர் உதவிபுரிந்ததாகவும் — அதற்காக அவருக்கு அந்த அரசியல்வாதி பல சலுகைகளை வழங்கினார் என்பதும் இப்போது தெரியவந்துள்ளது.

சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சர் இந்த நிதி உதவி பற்றி பொய்யான தகவல்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

சந்திரிகாவின் பிள்ளைகள் இருவரும் நாடு திரும்பினர்

கொழும்பு, ஓக. 31

தேர்தல் காலத்தில் பாதுகாப்பு கருதி லண்டனுக்கு அனுப்பப்பட்ட பிரதமர் சந்திரிகாவின் இரு பிள்ளைகளும் நேற்று முன்தினம் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர்.

சந்திரிகா கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சென்று மகள் யசோதராவையும் மகன் விமுக்தியையும் வரவேற்று அழைத்து வந்தார்.

தமது சகோதரியான சுனித்ராவின் முன்னாள் கணவரான உதய நாணயக்காரவுடன் சந்திரிகாவின் இரு பிள்ளைகளும் லண்டனுக்கு அனுப்பப்பட்டிருந்தனர். (உ-எ-6)

ஒலிபரப்பு கூட்டுத்தாபன புதிய பணிப்பாளர்

கொழும்பு, ஓக. 31

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக பிரபல பத்திரிகையாளரான திரு. ஜினதாஸ பீரிஸ் இன்று பதவி ஏற்கிறார்.

ஒலிபரப்புத்துறையில் இவர் பல ஆண்டுகள் அனுபவம் பெற்றவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடத்தல்காரன் வீரப்பன் சரணடையத் தயாராம்!

மைசூர், ஓக. 31

பிரபல சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் தான் சரணடையத் தயாராகவிருப்பதாக பொலீஸாருக்குத் தகவல் அனுப்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தனது அறிவிப்பை தன் சொந்தக் குரலில் ஒலி நாடாவில் பதிவு செய்து பொலீஸாருக்கு வீரப்பன் அனுப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது

சம்பந்தப்பட்ட ஒலி நாடாவை பல்வேறு தரப்பினரிடம் போட்டுக்காட்டி, அதில் பதிவாகி இருப்பது வீரப்பனின் குரல்தான் என பொலீஸார் உறுதி செய்தனர்;

எனினும் வீரப்பன் பொலீஸாரை ஏமாற்றி பொலீஸ் காவலில் உள்ள தனது மனைவியை விடுக்கும்படி கோர திட்டமிட்டுள்ளான் என்ற சந்தேகம் பொலீஸாருக்கு எழுந்துள்ளதாம்.

சரண் அடைய விருப்பம் தெரிவிக்கும் ஒலிநாடாவை வீரப்பன் இளைஞர் ஒருவர் மூலம் பொலீஸாருக்கு அனுப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீரப்பனின் இந்த அறிவிப்பு வெறும் ஏமாற்று நாடகம் என்று கூறி வீரப்பனின் கோரிக்கையை பொலீஸார் நிராகரித்து விட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

ராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியான தீர்வாக அரசியல் தீர்வே இருக்க முடியும்; இராணுவத் தீர்வாக இருக்க முடியாது என்பதை அனைவரும் தெரிந்து இருத்தல் வேண்டும்; மனதில் இருத்திக் கொள்ளவும் வேண்டும்.

அப்போது அரசியல் தீர்வு காணப்படுகின்றபோது அதனை நாம் அனைவரும் ஒன்றி செயற்படுத்துவோம். இவ்வாறு பிரிகேடியர் ஜெமுனு வதுகே தெரிவித்தார். (ஐ-எ-6)

பொ.ஐ.மு,...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்பட வேண்டும்; மலையக மக்கள் முன்னணி எம்.பியான சந்திரசேகரனுக்கு கொடுக்கப்பட வேண்டிய பிரதி அமைச்சர் பதவி எது என்பதனையும் இ.தொ.காவே தீர்மானிக்கும்'' — இவையே தொண்டமான் விதித்த நிபந்தனைகளாகும்.

இந்த நிபந்தனைகளை ஏற்க முடியாதென முன்னணித் தலைமைப்பீடம் அறிவித்ததை அடுத்தே சபாநாயகர் தெரிவில் இ.தொ.கா.வின் எம்.பிகள் ஐக்கிய தேசியக் கட்சி எம்பிக்களுடன் சேர்ந்து வாக்களித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

புதிய அரசுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது நாட்டில் புதிய சூழ்நிலை தோன்றியிருக்கிறது. இதுபோன்றதொரு சூழ்நிலை முன்பு இருந்தது கிடையாது

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்பதற்கு புதிய பிரதமர் பகிரங்கமாக ஆதரவு கொடுத்துள்ளார். இவர் போன்றதொரு தலைவி இதுவரை இருக்கவில்லை.

புதிய சூழ்நிலை தோன்றியிருப்பதால தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

பிரதமருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

ஐ.தே. கட்சியின் சின்னத்தில் இ.தொ.கா. போட்டியிட்டபோதும் அதன் தயவில் வாழவில்லை.

ஐ.தே.கவின் தயவில் நாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவில்லை.

நிரந்தரமாக ஐ.தே.க. அரசு அமைக்கவே ஐ.தே.கவுடன் உடன்பாடு செய்தோம். எந்த நோக்கத்துடன் உடன்பாடு செய்யப்பட்டதோ அந்தநோக்கம் நிறைவேறவில்லை

எமது மக்களின் ஆதரவின் பேரிலேயே நாம் தெரிவு செய்யப்பட்டோம்.

ஐ.தே.க. சின்னத்தில் போட்டியிட்டதன் காரணமாக இ.தொ.கா நாடாளுமன்றில் சுதந்திரமாக இயங்க முடியாது. என்று நினைப்பது தவறு

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்று உருவாகியுள்ள நிலை முந்திய அரசுகளில் இருக்கவில்லை. இப்போதுதான் முதல்தடவையாக அந்த அபிப்பிராயம் கொண்ட தலைவி வந்துள்ளது. பாராட்டப்பட வேண்டும்.

தமிழரின் —மலையகத் தமிழரின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் இந்த அரசு செயல்பட்டால் எமது ஆதரவைத் தெரிவிப்போம். இதனால்தான் தனிக்குழுவாக இயங்க முடிவு செய்துள்ளோம்.

இந்த முடிவை ஐ.தே.கவும் ஏற்றுக் கொண்டுள்ளது

சந்திரசேகரன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான் அவருக்குக் கிடைத்தன. சந்திரசேகரன் எம்பியானது ஒரு 'விபத்தே'. இ.தொ.காவுக்கு அவர் அச்சுறுத்தலாக இருப்பார் என்று எண்ணுவது முட்டாள்தனமானதாகும்' — என்று தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சேர எண்ணுகிறீர்களா? என்ற கேள்விக்கு தொண்டமான் பதிலளிக்கையில் 'நான் ஏன் சேர வேண்டும்? நாம் ஒரு தொழிற்சங்கமாக இருக்கிறோம்: கட்சியுடன் சேருவதற்கு நான் அரசியல்வாதி அல்ல. ஐ.தே.க அரசில் அமைச்சராக இருந்தும் நான் அக்கட்சியில் சேரவில்லை'' — என்றார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தோல்விக்குப் பிரதான காரணம் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து சிறிசேன கூரேயை நீக்கியதாகும் என்றும் தொண்டமான் கூறினார்.

தீவுப்பகுதிகளில் 50 ஆயிரம் பேரில் 9 பேர் வாக்களித்துள்ள இத்தேர்தலை சுதந்திரமானதும் நியாயமானதும் என்று கூறுவது வேடிக்கையானது அல்லவா? — என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

ஐ.தே.கவிலிருந்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சோனதாகக் கூறிவருகிறாராம்.

அனுரவை ஐ.தே.கவிற்கு அழைத்து வந்தவர் சிறிசேன கூரே அவருக்கும் ஐ.தே.கவில் எம்.பி. பதவி வழங்கப்படவில்லை

தமது அணியைச் சேர்ந்த சிறிசேன கூரே, முன்னாள் பிரதமர் ரணில் [illegible] எம்.பி. பதவி மற்றும் கட்சி [illegible] கத்தவர் நிலை [illegible] அனுர கருதுவதாகக் கூறப்படுகின்றது. (உ-9)

வடக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வனவு தொடர்பான பிரச்சினையை மீளாய்வு [illegible] அரசு நடவடிக்கை எடுத்துள்ளது'' என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)

புனர்வாழ்வு நிதியில் பல கோடி ரூபா மோச

விசாரிக்க ஆணைக்குழு

புனர்வாழ்வுப் பணிகளுக்காக வழங்கப்பட்ட சர்வதேச நிதியில் பல கோடி ரூபா பணம் மோசடி செய்ததாகக் கூறப்படுவது குறித்து விசாரிக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது.

துறைமுக, கப்பல் போக்குவரத்து மற்றும் புனர்வாழ்வுத்துறை அமைச்சர் ஜனாப் எம்.எச்.எம். அஷ்ரப் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

கடந்த காலங்களில் அகதிகளின் புனர்வாழ்வுக்காக பெறப்பட்ட சர்வதேச உதவிகளில் பெரும் மோசடி இடம் பெற்றுள்ளது என்றும் ஆணைக்குழுவினா வாளிகளாகக் கா ணோர் மீது கடும் நட எடுக்கப்படும் என்றும்

அமைச்சர் தம்மை த்து பேச்சுவார்த்தை திய தமிழர் விடுதலை டணி எம்.பிக்களிடம் வித்தார்.

ஒவ்வொரு மாவட்ட புனர்வாழ்வு அமை இணைப்பு அதிகாரி தமிழ்ப் பிரதிநிதி கப்படுவர் என்றும் கூறினார். (

ஓய்வு பெற்றோருக்கு மீள நியமனம் இல்லை

சந்திரிகா தீர்க்கமான முடிவு

கொழும்பு, ஓக. 31

ஓய்வுபெற்ற அரச அதிகாரிகளுக்கு மீண்டும் வேலை வாய்ப்பளிப்பதில்லை என்ற கொள்கையில் பிரதமர் சந்திரிகா கடும் போக்கைக் கடைப்பிடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சர் ஸ்ரீமணி, தமது கணவர் அத்துலத்முதலி அமைச்சராக இருந்தபோது அவரின் கீழ் அமைச்சுச் செயலாளராகப் பணி புரிந்த லஷ்மன் டி மெல்லை, தமது அமைச்சின் செயலா நியமிக்க நடவடிக்கை தார்.

பிரதமர் உடன தலையிட்டு அதனைத் நிறுத்திவிட்டார்.

ஓய்வுபெற்ற அதிக ளுக்கு மீண்டும் நிய வழங்குவதில்லை என் சின் கொள்கைக்கு எதிரானது என்று பிர ஸ்ரீமணியிடம் தெரிவித் டார். (உ

ROTARACT CLUB
சைக்கிள் ஓட்ட வீரர்களுக்
ஒரு மகத்தான செய்தி
யாழ். ரோட்டரக்ற் கழகம்
S. M. பெர்னாண்டோ நிறுவன
ஆதரவில் நடத்தும்
மாபெரும் 35 மைல்
சைக்கிள் ஓட்டப்போட்
முதல் பரிசு:- புத்தம் புதிய லுமாலா சைக்கிள்
இரண்டாம் பரிசு: இரண்டாயிரம் ரொக்கப் பண
மூன்றாம் பரிசு:- ஆயிரம் ரொக்கப் பண
மற்றும் வீரர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படு
காலம்:- 11-09-94 ஞாயிறு
இடம்:- யாழ். மத்திய கல்லூரி முன்றில்
நேரம்:- காலை 6. 30 மணி
அனுமதிக் கட்டணம் 100/-
விண்ணப்ப முடிவு திகதி 08-09-94
விண்ணப்பம் பெறும் இடங்கள்
S·M·FERNAND
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கண்ணன் லொட்ஜ்
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி
உதயன் புத்தக நிலையம்
பருத்தித்துறை.
ஜே. எஸ். ரி. ஸ்ரேசனறி
15, கண்டி வீதி, (கோட்டடி)
சாவகச்சேரி
(சி/896

மரண அறிவித்தல்

வையாபுரி முருகேசு பூபாலசிங்கம்

காரைநகர், களபூமி, சந்திரநல்லையைப் பிறப்பிட மாகவும், யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வசிப்பிடமா கவும் கொண்ட முருகேசு பூபாலசிங்கம் கொழும்பி காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (1-9-9 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்க ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:-
பூ. கனகலிங்க

132/3, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(3265

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 31-08-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.